1-11-57

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 21

1 - 11 - '57

குழந்தைகளே!	பக்கம்	2
கன்றும் கண்ணனும்	..	3
ஸைக்கிள் கடை	..	4
மதம் பிடித்த யானை!	..	9
கடற் புலி	..	15
கடைசி பஸ்	..	18
மலர் மாலை	..	24
புகைப்படம்	..	25

அட்டைப் படம்:

புஷ்பத்துறை சுப்பிரமணியம்

போட்டோ: 2-ம் அட்டை

செய்திகள் - 3-வது அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ: 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

வெடி!

குழந்தைகளே!

உங்கள் அன்பையும் ஆதரவையும் எண்ணிப் பூரிப்படைகிறேன். உங்களுக்கெல்லாம் எப்படி என் நன்றியறிதலைக் கூறுவது என்று புரியாமல் விழிக்கிறேன். எனக்கு மூச்சே திணறுகிறது; மலைப்புத் தட்டுகிறது. கண்ணன் மலரைப் பாராட்டி வந்துள்ள ஆயிரக்கணக்கான கடிதங்களுக்கு நான் எந்தக் காலத்தில் பதில் எழுதி முடிப்பது? எத்தனை விதமான கடிதங்கள்! பாராட்டை எத்தனை ஆயிரம் விதமாகச் செய்யலாம் என்பதை உங்கள் கடிதங்கள் நிரூபித்துவிட்டன. அத்தனைக்கும் கஞ்சத்தனமாக ஒரே ஒரு நன்றி சொன்னால் போதுமா? ஆயிரம் கோடி நன்றியை இதன் மூலம் உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன். கண்ணனுக்குக் கிடைத்துள்ள பாராட்டுக்கள் எல்லாம் உண்மையில் உங்களுக்குக் கிடைத்துள்ள பாராட்டுகள்தான். உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் கிடைத்துள்ள பாராட்டுக்கள்.

தொடர்கதைப் போட்டிக்கான கடைசித் தேதி முடிந்துவிட்டது. இனி வரும் கதைகள் போட்டியில் சேர்க்கப்பட மாட்டா. போட்டியின் முடிவு வழக்கம்போல டிசம்பர் இரண்டாவது இதழில் வெளியாகும். பரிசு பெற்ற கதை புதிய ஆண்டின் தொடக்கத்தில் வெளிவரும். இந்தத் தடவை பரிசைத் தட்டிக்கொண்டு போகப்போவது யாராக இருந்தாலும், தன்னம்பிக்கையோடு கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீபாவளி மலரில் வளரும் எழுத்தாளர் வரிசையில் வளர்ந்த எழுத்தாளர்கள் இரண்டொருவரும் இருக்கிறார்கள். இன்னும் சில வளரும் எழுத்தாளர்கள் படங்களை மலரில் வெளியிட முடியவில்லை. அவை உரிய காலத்தில் எனக்குக் கிடைக்காததால் அவற்றைச் சேர்க்க முடியாமல் போய்விட்டது. பின்னால் தனித் தனிக் குறிப்பு எழுதும்போது அவர்களுடைய படங்களும் குறிப்பும் வெளியிடலாம் என்பது என் எண்ணம். புத்தாண்டு முதல் இதழிலிருந்து இந்த அறிமுகத்தைத் தொடங்க எண்ணியிருக்கிறோம்.

பரிசுத் தொடர்கதைக்கு முன் இன்னும் ஒரு புதிய தொடர்கதை ஆரம்பிக்கவில்லையா என்று பலர் கேட்டு வருகிறார்கள். இதுபற்றி அடுத்த இதழில் அறிவிக்கலாம் என எண்ணுகிறேன். இந்த இதழில் அவகாசம் இல்லாத காரணத்தினால் நீங்களும் நானும் என்ற பகுதி வெளிவரவில்லை. அடுத்த இதழிலிருந்து வழக்கம்போல் இது பிரசுரமாகும்.

நவம்பர் பதினாலாம் தேதி நேருவின் பிறந்த நாள் வருகிறது. அதை முன்னிட்டு அடுத்த இதழ் விசேஷக் கட்டுரைகளுடன் வெளிவரும்.

கண்ணனிடத்திலே உங்களுக்கு அன்பு வளர்ந்து பெருகி வருவதை நான் உணருகிறேன். இந்த அன்பைப் பெறுவதுதான் கண்ணன் லட்சியம். உங்கள் அன்பும் உங்கள் பெரியோர்களின் ஆதரவும் கண்ணனுக்கு என்றென்றும் உண்டு என்பதை நான் அறிவேன். உங்கள் மகிழ்ச்சியிலும் மலர்ச்சியிலும் கண்ணனுக்குப் பெரும் பங்கு உண்டு. இதற்கு உங்களுடைய அன்பே உரமாக விளங்கி ஊட்டம் தருகிறது. இந்த அன்பு இன்னும் பல்கிப் பெருகிப் பல்லாண்டு பல்லாண்டு வாழட்டும்.

—ஆசிரியர்.

கன்றும் கண்ணனும்

பூவண்ணன்



வெள்ளைப்பசு வேகமாக
எங்கே போகுது? - அது
துள்ளிஓடும் கன்றினையே
நாடிப் போகுது.
கன்றுதுள்ளி எவ்விடத்தை
நாடிப் போகுது? - அது
கண்ணனென்னும் சின்னவனைத்
தேடிப் போகுது.
கண்ணனென்னும் சின்னப்பையன்
என்ன செய்கிறான்? - அவன்
அண்ணன் தந்தகாசுடனே
கடைக்குப் போகிறான்.
கடைக்குப்போன கண்ணனங்கு
என்ன செய்திட்டான்? - அங்கே
காசைத்தந்து வாழைப்பழம்
ஒன்றை வாங்கினான்.
காசுதந்து வாங்கியபின்
என்ன செய்திட்டான்? - அதை
ஆசையோடு தேடிவந்த
கன்றுக்குத் தந்தான்.
கண்ணன்தந்த பழந்தைக் கன்று
கடித்துத் தின்றது - அதைக்
கண்டுகண்டு சின்னக்கண்ணன்
களிப்ப டைந்தனன்,
வெள்ளைப்பசு தேடி வந்து
கன்றைக் கண்டது - அது
வேகமாகத் தலையசைத்து
மகிழ்ச்சி கொண்டது;
கன்றையீன்ற பசுவடைந்த
மகிழ்ச்சி அதிகமா? - அன்றி
கன்றைப் பார்த்து நின்ற கண்ணன்
மகிழ்ச்சி அகிகமா?
இந்தக் கேள்வி ஒன்றினுக்குப்
பதில ளிக்கவே—தம்பி
எந்தனாலே முடியவில்லை
என்ன செய்வது?

சைகிள் கடை

கே.எஸ்.பி

பஸ் ஸ்டாண்டுக்கு எதிர்வாடையில் லோகுவின் சைக்கிள் கடை. சைக்கிள் கடை என்பதற்கு வாசலில் தொங்கும் டயர்கள், ஒட்டை உடைசல் சைக்கிள் சாமான்கள், கிழிந்த 'ட்யூப்'புகள் இவை அடையாளங்கள். கடை சின்னக் கடையானாலும் வியாபாரம் பெரிசு; காற்றடிக்கும் பம்புக்கு எப்போதும் வேலைதான்.

காற்றடிக்க வரும் சிறுவன் நல்லதம்பி. பாவம், சின்னப் பையன். காலால் பம்பு முனையை அழுத்தி, உடலை வளைத்து மூச்சைப் பிடித்துக்கொண்டு காற்று அடிப்பான்.

லோகுவின் வியாபாரம் அந்த வட்டாரத்தில் பிரசித்தம். சாதாரணப் பதினெட்டு அங்குல சைக்கிளிலிருந்து இருபத்திரண்டு 'இஞ்ச்' வண்டி, சைக்கிள் ரிக்ஷா, மோட்டார் சைக்கிள், ஆட்டோ ரிக்ஷா வரைக்கும் அவன் கைபடாத வண்டியே இல்லை.

நல்ல சர்வீஸ்; சார்ஜும் குறைவு. வியாபாரத்துக்குக் குறைவு ஏது?

கடைப் பையன்கள் இரண்டு பேர்; கணேசன் ஒன்று; நல்லதம்பி இரண்டாவது. கோயில் தேவஸ்தானத்தைச் சேர்ந்த இடமாகையால் வாடகை ஆறு ரூபாய்தான்.

கடைப் பையன்களுக்குக் காலையில் நாஸ்தாவுக்குக் காசு உண்டு; மத்தியான்னம் சாப்பாடு மொத்தமாக வந்துவிடும். சாயங்காலம் ஒரு பன்னுக்கும் 'சிங்கில்' கப் டீக்கும் துட்டு உண்டு. மாதச் சம்பளம் என்று ஒன்றும் கிடைக்காது. வந்த அவசரத்துக்கு அரை ஒன்று கிடைக்கும். முதலாளி லோகுவே 'ஐயர்' கடையில் இருந்து முன்னுக்கு வந்தவன்தான்.

நல்லதம்பிக்கு அடக்க ஒடுக்கமான சுபாவம்; வருபவர்களிடம் அதிகமாகப் பேசமாட்டான். காசை ஒழுங்காகக் கணக்குப் பண்ணி வாங்கி லோகுவிடம் சேர்ப்பித்துவிடுவான்.

கணேசன் அவனுக்கு நேர் விரோதம். தெருவில் போகும் சைக்கிளையெல்லாம் கூப்பிடுவான். ஸ்கூல் போகும் சிறுவர்களைப் பார்த்துக் கண்ணடிப்பான்; சீட்டியடிப்பான்.

கடைக்கு வருபவர்களிடம் தனியே தனக்கென்று துட்டு கேட்பான். ஏமாந்து போன ஓரிருவர் எப்போதாவது அவன் பேச்சில் மாட்டிக்கொண்டு தர்மம் செய்வார்கள்.

எல்லாம் லோகுவுக்கு ஒரு மாதிரியாகத் தெரியும். இருந்தாலும் வேலையில் அவன்தான் கெட்டிக்காரன் என்பது அவன் அபிப்பிராயம். லோகுவுக்கு அவன் தூரத்து உறவுகூட. அதனால் இஷ்டப்படி நடந்து கொள்வான். நல்லதம்பியை அலட்சியமாக நடத்த முயல்வான். சதா சர்வ காலமும் நல்லதம்பியைக் குறை சொல்வதிலேயே அவன் பொழுது கழிந்தது.

* * *

திடீரென்று லோகு கிராமத்துக்குக் கிளம்பும்படி ஆயிற்று. அவன்

சிற்றப்பா மகளுக்குக் கல்யாண மாம்.

கடைக்குக் காவல்—வியாபாரம் செய்ய, கணக்குப் பார்க்க ஆள்! அவனிடம் நாலு வருஷமாக வேலை செய்பவன் கணேசன்தான்.

கிளம்பும் தினம் லோகு கணேசனைக் கூப்பிட்டான்.

''டேய், ஊருக்குப் போறேன்; வர நாலு நாள் பிடிக்கும். கடை வியாபாரத்தை நீதான் கவனிச்சுக்கணும்; நல்லதம்பிகிட்டேயும் சொல்லிட்டுப் போறேன்..!''

''அதெல்லாம் பயப்படாதீங்க எசமான்; அந்தச் சோம்பேறிப் பயல் என்னதைச் சாதிச்சுடுவான்? எல்லாம் நான் பார்த்துக்குவேன்'' என்றான் கணேசன்.

ஓரமாக நின்றுகொண்டிருந்த நல்லதம்பி காதில் எல்லாம் விழுந்தன. அவன் கண்கள் கலங்கின. மூளை வேலை செய்தது. கணேசனுக்கு இவ்வளவு அகம்பாவமா?

யாதும் நடக்காததுபோல் வேலையைத் தொடங்கினான்.

* * *

லோகு ஊருக்குக் கிளம்பி விட்டான், கடைக்கு 'முதலாளி' கணேசன்தான்!

தன் இஷ்டம்போல் நடந்து கொள்ள அவனுக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. முதலாளி போல நல்ல தம்பியை விரட்டினான்; கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தான்.

நல்லதம்பி நயமாகவே பழகினான். தன் வருத்தத்தை, வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அன்றைய வியாபாரம் சுமார் தான்; மொத்தம் கிடைத்த தொகை கிட்டதட்ட நாலு ரூபாய்.

கணேசன் காசைப் பையில் போட்டுக்கொண்டான். ''முதலாளி வந்ததும் பத்திரமாக் கொடுக்கணும்; உன்னிடம் கொடுத்தால் செலவழிந்துவிடும்..!'' என்றான் நல்லதம்பியிடம்.

கடை சாத்தும் நேரம்.

''டேய் நல்லதம்பி; நீ ராத்திரிக்கு இங்கேயே படுத்துக்கோ; உனக்கு வீடு வாசல் தான் கிடையாதே....! நான் காலையில் வந்து விடுகிறேன்!'' என்றான்.

நல்லதம்பி ஒப்புக்கொண்டான்.

''அதனுலென்ன, கடைக்கும் காவலாச்சு!''

* * *

இரண்டாம் நாள்.

அன்றைக்கு வியாபாரம் சற்று மும்முரம்; நல்லதம்பி ஓடியாடி உழைத்தான். கணேசன் டீ வரவழைத்துச் சாப்பிட்டான்; கோயில் பத்துக் கடையிலிருந்து இட்டிலி வந்தது. ஆனால் நல்லதம்பிக்கோ காலணு கிடைக்கவில்லை. கடை சாத்தும்போது இரண்டணுவைக் கொடுத்து, ''கடையைப் பத்திரமாகப் பார்த்துக்கோ, பத்திரம்..பத்திரம்..!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

எத்தனை பத்திரம்..! நல்லதம்பி என்ன, மூளை கெட்டவனு, கடையைத் திறந்து விட்டுவிட?

இரவு வழக்கம்போல நல்லதம்பி கடையை அடைத்துவிட்டுப் படுத்துக்கொண்டான்.

விளக்கை அணைக்கும் சமயம். கடைச் சாமான்களை ஒரு தரம் நிமிர்ந்து பார்த்தபோது அவனுக்குப் பகீரென்றது.

மூன்று பம்புகள் இருந்த இடத்தில் இரண்டு..! பஞ்சர் போடும் ரப்பர், மற்றும் சில்லறைச் சாமான்களில் சிறிது குறைவு.. ஆணிகள், போல்ட்டுகள், தட்டு முட்டுச் சாமான்கள் இவற்றில் கொஞ்சம் களவு..!

அட பாவமே..!

நல்லதம்பிக்கு இதயமே நின்றுவிடும் போலிருந்தது. யாருடைய அஜாக்கிரதை! நேற்று இரவு யாரும் கடைக்குள் நுழையவில்லை. பின்னே எப்படித் திருட்டுப் போயிற்று?

பொழுது நன்றாகத்தான் விடிந்தது. இரவு முழுவதும் தூங்காததால் கண்கள் 'ஜிவு ஜிவு' என்று இருந்தன.

கணேசன் எக்காளம் போட்டுக் கொண்டு வந்தான்.

''என்னடா நல்லதம்பி; மூஞ்சி ஒரு மாதிரியா..!''

''கடைச் சாமான்கள் குறைகிறது.. திருடு..!'' அவன் விக்கினான்.

''அட பாவி..! திருடா..எப்படிடா திருடனை உள்ளே விட்டே? உன்னைத் தூங்க விட்ட தன் பலன்..! மட்டிப் பயலே.. முதலாளிக்கு எப்படிப் பதில் சொல்வேன்..!''

நல்லதம்பிக்குத் தன் மேல் ஒரு தப்பும் இல்லை என்று சத்தியமாகத் தோன்றியது. அவன் பகலில் வெளியே சென்றிருந்த சமயம் கணேசன் செய்த காரியமாக இருக்குமா? அவன் அவ்வளவு கெட்டவனா?

ஏன் இருக்கக் கூடாது?

* * *

லோகு அன்று பகலே திரும்பி விட்டான். கல்யாணத்திலும் கடை ஞாபகந்தான் அவனுக்கு.

வந்ததும் முதல் கேள்வியாகக் கணேசனைக் கேட்டான்: ''என்னடா வியாபாரம்?''

''ரொம்ப மட்டம் எசமான்..! இந்த நல்லதம்பிப் பய குறட்டை விட்டுத் தூங்கினதிலே சாமான்கள் வேறே களவு..!''

நல்லதம்பி நடுங்கினான். என்ன நேரப்போகிறதோ?

''டேய் நல்லதம்பி..!'' லோகுவின் கர்ஜனை கடை முழுவதும் கேட்டது.

நல்லதம்பிக்கு வேர்த்து ஊற்றியது. துடை, கை கால்கள் எல்லாம் நடுங்கின.

''நான் படுத்தது வாஸ்தவந்தான் எசமான்; ஆனா யாரும் திருட வரல்லே. இந்தக் கணேசன் வேறே என்னை அவமானமா நடத்தி..!''

''சீ கழுதை..சாமானையும் தொலைச்சுப்புட்டுப் பேச்சு..!''

''என்னடா வரும்படி..!''—அடுத்த கேள்வி.

''இரண்டு நாளைக்கும் சேர்ந்து மூணு ரூபாய் நாலணு..!''

லோகு உதட்டைப் பிதுக்கினுன்.

''அவ்வளவுதானு....அதிலேயும் சூது ஏதாவது..!''

நல்லதம்பிக்குத் தெரியும், இரண்டு நாள் வரும்படி எட்டு ரூபாய் என்று! கணேசனைக் காட்டித் தர அவன் மனம் ஒப்பவில்லை.

ஒரு மாதிரியாகச் சண்டை முடிந்து ஓய்ந்தது. நல்லதம்பிக்கு அன்று முழுவதும் மனக்குழப்பம். முதலாளி வேறு எரிந்து விழுந்தார்.

* * *

அடுத்த நாள். கடை திறந்து

ஒருமணி நேரமாகியும் கணேசன் வரவில்லை.

மணி ஓடிக்கொண்டே யிருந்தது. பகலும் கடந்து விட்டது.

''அவனுக்கு என்னுடா கேடு..! போய்ப் பார்த்துண்டு வா..!'' என்ருன் லோகு நல்லதம்பியை.

நல்லதம்பி போய்ப் பார்த்த போது தூக்கி வாரிப்போட்டது. கணேசன் குடிசையில் காணவில்லை. ஆனுல்—

எதிர்த்தாற்போல ஒரு சின்ன சைக்கிள் கடை. திருட்டுப் போன பம்பு, தட்டு முட்டுச் சாமான்கள், எல்லாம் கடைக்கு முதல். முதலாளி கணேசன் உடைசல் நாற்காலி ஒன்றில் ஆட்களை எதிர் பார்த்து ஏங்கியிருந்தான்.

''இது என்னடா..!''

''எத்தனே நாளு அடிமைத் தொழில்? சேர்த்து வச்ச பணம் கொஞ்சம் இருந்தது. சொந்த மாகவே வச்சுட்டேன் வியா பாரம்..!''

எல்லாம் திருட்டுச் சொத்து என்று தெரியும் நல்லதம்பிக்கு.

நல்லதம்பி கடைக்குத் திரும்பி வந்தான்.

''அவனே வூட்லே காணலே எசமான்..!''

''பின்னே வேறே எங்கியானும் பார்த்தியா..!''

''சைக்கிள் கடையிலே இருந் தான்..!''

''எந்தக் கடை..?''

''சொந்தக்கடை போட்டிருக் கான்!''

லோகு அவனே ஆச்சரியத்தோடு பார்த்தான்.

''சாமான்கள்..பணம்..?''

நல்லதம்பி விக்க ஆரம்பித்தான்:

''எசமான்..! என் மேலே பழியைப் போட்டீங்க ரெண்டு பேருமா..! திருட்டுப் போன பம்பும் சாமான்களும் அவன் கடையில் இருந்தன. பார்த்தேன்! எனக்குத் தெரியாமெ நான் வெளியில் போயிருக்கச்சே கள்வாடி யிருக்கான். கடைக்குக் காவலாகப் படுத்தவன் மேலே பழி..!''

''நான் பார்த்துக்கறேன் அந்தப்

நிதிக் கச்சேரி

வானகான சபாவின் கட்டட நிதிக்காக ஒரு கச்சேரி ஏற்பாடு செய்திருந்தார்கள். திருவாளர் ஹரிஹர பாகவதர் கச்சேரி செய்ய முன்வந்தார்.

அன்றுதான் கச்சேரி. கச்சேரி முன் வரிசையில் உட்கார்ந்து ரசிக்க சின்னஞ் சிறு குழந்தைகள் கூடியிருந்தார்கள்.

பந்தலின் இடது மூலையில் 'உருளைக் கிழங்கு ஹல்வா'வைப் பற்றிப் பெண்களிடையே பலமான ஆராய்ச்சியும் அம்பிகா விலாஸ் பட்டணம் பொடிபற்றி ஆடவர்களிடையே சர்ச்சையும் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

ரசிகத் தன்மை மிகுந்த ஜனங்கள் இறுதிவரை பொறுமையோடு அமர்ந்திருந்து, அவர் கச்சேரியை முடித்ததும் பலமாக 'அப்ளாஸ்' கொடுத்தார்கள்!

வானகான சபாவின் காரியதரிசி திருவாளர் வல்லூறு அவர்கள் ஒரு சில விநாடி நேரப் பேச்சுக்குப் பின் வரவு செலவுக் கணக்கைச் சமர்ப்பித்தார்.

மொத்தம் வசூலான தொகை	150.59
செலவு விவரம்:	
பந்தலுக்காக	65.00
ஒலிபெருக்கி, விளக்கு	37.75
விளம்பரம். நோட்டீஸ்	25.25
சிற்றுண்டி. பானங்கள்.	6.50
இதர செலவுகள்: (சபா டிக்கெட்டுகள் உள்பட)	20.00
ஆக.	163.50

துண்டு விழும் தொகையைச் சரிகட்ட சபா நிர்வாகிகளுடன் பாகவதரும் பங்குகொண்டார். சபாவைச் சிறிதுகாலம் மூடி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

—தே. லட்சுமிநரசிம்மன்.

பயலே..!'' என்றான் லோகு.

* * *

அரைமணி சென்றிருக்கும். கடைவாசலில் சைக்கிளில் வேலையாக இருந்தான் நல்லதம்பி.

உள்ளே எசமானும் இன்னொரு ஆளும் பேசுவது நல்லதம்பி காதில் தெளிவாக விழுந்தது.

''டேய்..! நல்லதம்பி தங்கக் கட்டி யாக்கும். ரொம்ப நாணயஸ்தன். அவனையும் சேர்த்துண்டு ரெண்டு பேருமா கடையை நடத்தி லாபத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். எனக்கு இந்தக் கடை போதும்..!''

யாருடன் பேச்சு?

மற்றொரு குரல் பேசியது:

''ஆமாம் மாமா; அதுதான் சரி; நாம் நடத்தின தீப் பரீட்சையில் அவன் தேறிவிட்டான். நீங்க சொன்னபடியெல்லாம் செஞ்சும் அவன் நாணயம் தவறல்லே.. கடைக் காசுக்கோ பொருளுக்கோ அவன் ஆசைப்படல்லே..! வீணா அவனைத் திருடன் ஆக்கினேன். உங்க சொல்படி அவமரியாதையா நடத்தினேன்..! நீங்க சொன்ன படி நானே சாமானை எடுத்துண்டு போய்த் தனிக்கடை வச்சேன். இவ்வளவுக்கும் அவன் இம்மியளவு பிசகல்லே...!''

நல்லதம்பி எல்லாவற்றையும் கேட்டான். யாரது, கணேசனா— அவன் குரல்தானே இது?

''நல்லதம்பி'' என்று கூப்பிட்டான் லோகு. உள்ளே நுழைந்த அவனை எதிர்பாராத ஆச்சரியம் வரவேற்றது.

''நீ பார்த்த புது சைக்கிள்கடை நான் போட்டதுதான். இன்று முதல் நீயும் கணேசனும் அதற்கு முதலாளிகள். ஒற்றுமையா இரண்டு பேரும் சிரத்தையோடு கவனிக்கணும்! டேய் கணேசா, அவனிடம் முறைச்சயோ.. உன்னை..!'—லோகு அடுக்கிக் கொண்டே போனான்.

நல்ல தம்பி இருவரையும் ஆச்சரியத்தோடு பார்த்தான்!

மதம் பிடித்த யானை!

ஆர். பி. மல்லாரி

“ஒரு பயங்கரமான காட்டு யானை அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்கள்மீது அடிக்கடி படை எடுத்து வந்து எல்லாவற்றையும் சர்வநாசம் செய்துவிடுகிறது!” என்று அதிகாரிகளுக்குத் தகவல் வந்தது. ஒரு தடவை மாத்திரம் வரவில்லை; பல தடவை தொடர்ந்து வந்தது. அதை எப்படியும் பிடித்துவிட வேண்டுமென்று பிரதம அதிகாரி தீர்மானம் செய்தார். அப்படி உயிருடன் பிடிக்க இயலாவிட்டால், சுட்டுக் கொன்றுவிட வேண்டும் என்றும் முடிவு செய்தனர். அது ஒரு பெண் யானை. அதுதான் அவ்வளவு அட்டகாசம் செய்துகொண் டிருந்தது!

அச்சுதன் கோவில் வட்டாரத்திலேயே கேசவன்தான் யானை பிடிக்கும் தொழிலில் நிபுணன். தன் தொழிலினால் வரும் சொற்ப வருமானத்தில், யாரையும் காக்காய்ப் பிடிக்காமல், மானத்தோடு வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஆண்டவன் கொடுத்த செல்வம் அவன் செல்வமகன் மாதவன்தான். மாதவன் பத்து வயதுப் பாலகனாக இருந்தபோதிலும் தன் தந்தைக்கு எவ்வளவோ உதவியாக இருந்தான். காட்டைப்பற்றியும் காட்டில் வாழும் மிருகங்களைப்பற்றியும், அதிலும் பொதுவாக யானைகளின் இயல்புகள் பற்றியும் மாதவன் கொண்டிருந்த அறிவு கேசவனையே ஆச்சரியமடையச் செய்தது.

யானையின் அட்டூழியங்கள் வர வர அதிகரித்தன. பிரம்மாண்டமான அந்த யானையின் கொடிய செயல்களைப்பற்றிக் கற்பனை செய்த மக்கள் கிராமம் கிராமமாகக் காலி செய்துகொண் டிருந்தனர்.

இந்த யானைகூட ஒரு சமயம் கேசவனால் பிடிபட்டதே! குழியில் விழுந்த அந்தப் பெண் யானை மிகவும் பெரிதாக இருந்ததால், அதைப் பழக்கிப் பயன்படுத்த முடியாது என்ற எண்ணத்துடன் வெளியேற்றி, சுயேச்சையுடன் விட்டுவிட்டார்கள். அப்போது அதற்குப் பிடித்த மதம்தான் இன்னும் தலைவிரித்து ஆடிக்கொண்டிருந்தது. லக்ஷக்கணக்கான ரூபாய்கள் வரை சேதம் ஏற்பட்டுவிட்டது; சில உயிர்களும் மாய்ந்துவிட்டன.

பெரிய அதிகாரி உடனே அந்த வட்டாரத்தில் முகாம் போட்டார். உயிருடனோ அல்லது உயிரில்லாமலோ அந்த யானையுடன்தான் திரும்புவது என்ற தீர்மானத்துடன் வந்துசேர்ந்தார். அவர் நேருக்கு நேரே நின்று ஒன்றும் சாதித்துவிடப் போவதில்லை. கேசவன்தான் எல்லா வேலைகளையும் செய்யவேண்டும்; ஆனால் வெற்றி மாலையைச் சூட்டிக்கொள்ள ஓர் அதிகாரி வேண்டாமா? தம்முடைய மகன் சகிதம் அவர் வந்து சேர்ந்தார். ஒரு தடவை அந்தக் காட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பி வருவதாக அவர் மகன் துரை வாக்குறுதி கொடுத்ததன் பேரில் அவனை அழைத்து வந்தார்.

பெரிய துரைமகன் சின்னதுரையல்லவா? கேசவன் அவனைத் தன் தலைமேல் வைத்துக் கூத்தாடினான். அபாயமான பிரதேசங்களுக்குப் போகவேண்டாமென்று சொல்லி, தன் மகன் மாதவனுடன் அவனை அனுப்பவும் செய்தான். மாதவனிடம் தந்தைக்கு அவ்வளவு நம்பிக்கை.

துரை பத்தாவது படித்துக்கொண்டிருந்தவன் விடுமுறையில் வந்திருந்தபடியால், இன்னும் பல நாட்கள் தங்கி யானையைப் பிடிப்பதை நேரே கண்டுபோக விரும்பினான். ஏனெனில் வெறும் பட்டண வாழ்வைவிட இந்தப் புதிய சூழ்நிலை அவனுக்கு மிகவும்

பிடித்திருந்தது. மேலும் மாதவனின் புத்தி சாதுர்யம் அவனை மிகவும் மயக்கிவிட்டது. வயதில் சுமார் ஐந்து ஆறு ஆண்டுகள் குறைவான மாதவன் தன்னைவிட எவ்வளவு அறிவு நுட்பம் உள்ளவனாக இருக்கிறான் என்பதை, துரை எண்ணிப் பார்க்கும்போது அவனுக்கே சிறிது அவமானமாக இருந்தது.

ஏதோ ஒரு முக்கிய வேலையாக அவசரமாகத் தலைமைக்காரியாலயத்துக்குப் போகவேண்டி இருந்ததால், யானையைப் பிடிக்க, செய்ய வேண்டிய ஆரம்ப வேலைகளைச் செய்யும்படி கேசவனிடம் உத்தரவிட்டு, துரையையும் மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி அவன் பாதுகாப்பிலேயே விட்டு, அதிகாரி சென்றுவிட்டார். யானை நழுவி குழியில் விழுந்தது போலிருந்தது துரைக்கு. யானை பிடிக்கும் கலையைப்பற்றி மாதவனிடம் முழுக்க முழுக்கத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆசை.

''இந்தப் பக்கங்களில் யானை இருக்குன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று முதல் கேள்வியாகத் துரை கேட்டான்.

மாதவன் 'கடகட'வென நகைத்தான். யானைகூடவா கண்ணில் படாமல் போய்விடும்? துரை இதைப் புரிந்துகொண்டவன்போல அடுக்குக் கேள்வியைப் போட்டான்!

''யானை கண்ணிலே படலே. அது அட்டகாசமே செய்யலே, அது வந்து போன கால் சுவடுகூட தழைகள் இருக்கிறதாலே தெரியலே. அப்போ?''

தான் புத்திசாலித்தனமாக இந்த மூன்று கொக்கிகளையும் போட்டுவிட்டதாக, துரை லேசாகப் புன்முறுவல் செய்தான்.

''கால் சுவடு பூராவும் இருக்கணும்னு அவசியமில்லே; லேசா இருந்தாக்கூடத் தெரிஞ்சுக்குவோம்!'' என்றான் கேசவன்.

துரைக்குச் சரியாகப் புரியவில்லை. ''அப்படின்னா?''

''நாங்க காட்டிலேயே வசிக்கிறவங்க. அதனாலே உங்களுக்குச் சாதாரணமாகப் படும் பல விஷயங்களை நாங்கள் நுட்பமாகக் கவனிப்போம். குதிரை, ஆடு, மாடு, யானை மனுஷங்க இவைகளின் கால் சுவடுகளைக் கண்டுபிடிக்கிறது எங்களுக்கு ரொம்பச் சுலபம். ஆனா இதோட பாம்பு, எலி, தவளை, பல்லி முதலியவைகளின் சுவடுகளைக்கூட சாமர்த்தியமாக் கண்டுபிடிச்சிடுவோம். இந்தச் சுவட்டைப் பிடிச்சுத் தொடர்ந்து போனோம்னா, அந்தப் பிராணி எங்கே இருக்குதுன்னு தெரிஞ்சுக்காமெ திரும்ப மாட்டோம்!'' என்றான் மாதவன் சற்றுப் பெருமையாக.

''சரி, சுவடே இல்லேன்னா?''

''மழை பெஞ்சு சுவடு மறைஞ்சு போயிட்டா விட்டுடுவோமா? வேற ஆதாரங்களைப் பார்ப்போம். ஒரு இடத்துலே புதர் முறிஞ்சிருக்கும்; இன்னொரு இடத்திலே ஏதாச்சும் கல் பேந்திருக்கும்; அப்புறம் தொடர்ந்து போனா ஒரு கல்லுலே சீறல் விழுந்திருக்கும்; அப்புறம் புல் கசங்கி இருக்கும். இதை வச்சுக்கிட்டே தொடருவோம். நடுவிலே ஒரு எறும்பு நசுங்கிப் போயிருந்தாக்கூட இந்தப் பக்கம்தான் அந்த மிருகமோ, ஜந்துவோ போயிருக்கும்னு தொடர்ந்து ஆராய்ந்து பார்த்துக் கண்டுபிடிப்போம்.''

துரை அசந்து உட்கார்ந்துவிட்டான். இந்தச் சிறுவனுக்கு இவ்வளவு யூகமா?

ஒரு சில நாட்களில் கேசவன் யானையைப் பிடிக்கச் செய்யவேண்டிய ஆரம்ப வேலைகளை எல்லாம் செய்து விட்டான். அந்த யானை வழக்கமாக வரும் பாதையில் முக்கோணத்தின் மூன்று முனைகள் போல மூன்று குழிகளை வெட்டினான். குழிகளின் மேல்பாகம் சற்றுக் குறுகியும் இருந்தது. குழியின் அடியில் மெதுவான புல்லையும் தழைகளையும் போட்டு நிரப்பினான். யானை விழுந்தால் அடிபடாமல் இருக்க!

ஆனால், ஒரு விஷயத்தைக் கேசவன் கவனிக்கவில்லை. மாதவன்தான் அதை எடுத்துக் கூறினான். யானையின் காலடியைப் பார்க்கும்போது ஒரு யானையின் காலடி போல இல்லை; இரண்டு யானைகளின் காலடிகள் போல் சற்று வித்தியாசத்துடன்

இருப்பதாக மாதவனுக்குப் பட்டது. ஆரம்பத்தில் கேசவன் இதைப்பற்றிச் சிந்தித்தான். பிறகு இந்த யானையின் இரண்டு கால்கள் ஒருவேளை சற்று வேறுவிதமாக இருந்தாலும் இருக்கலாம் என்று முடிவு செய்துகொண்டான். எல்லா வேலையும் முடிந்தது. குழியின் மேல்பாகத்தில் மூங்கில் பிளாச்சுகளை அடுக்கி, அவை வெளியே தெரியாதபடி இலைகள் போட்டு மூட வேண்டியதுதான் பாக்கி.

''ஏன் 'கெத்தா' முறைப்படி இங்கே யானையைப் பிடிக்க முடியாதா?'' என்று மைசூர் முறை பற்றித் தான் படித்த புத்தகப் படிப்பின் அறிவை துரை லேசாக அவிழ்த்து விட்டான். 'கெத்தா' எப்படி இருக்குமென்றே அவனுக்குத் தெரியாது.

''கெத்தா என்ற ஒரு விதக் கூண்டை உபயோகித்து யானையைப் பிடிக்க இந்தப் பக்கத்துக் காடுகளிலே வசதி இல்லே!'' என்ருன் தொழில் அறிவுள்ள கேசவன்.

பிறகு இந்தச் சம்பாஷணை தொடரவில்லை! அன்றிரவே அதிகாரி வந்துவிட, குழிகளும் மூடப்பட்டன.

அதிகாரிக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டு விட்டது.

''ஏன் கேசவா!....'' என்று ஆரம்பித்தார்,

''எஜமான்!'' என்ருன் கேசவன்,

''யானைங்க கூட்டமா வந்தா. அதுகளைப் பயமுறுத்தி வெரட்டினு,



ஒண்ணு இரண்டு குழியிலே விழும். இப்போ தனியா அலையும் இந்த யானை விழுமோ?''

''இது முரட்டு யானைங்க... கண்ணு மண்ணு பாக்காமே வந்து விழுந்திடும்னுதான் நெனக்கிறேங்க!'' என்றான் கேசவன்.

அவன் வாக்கு பொய்யாகவில்லை. அன்றிரவு பெரிய சத்தம் ஒன்று கேட்டது. அதைக் கேட்டு துரை தூக்கத்திலிருந்து விழித்து நடுநடுங்கிக்கொண்டிருந்தார். மாதவன் புன்முறுவலுடன், ''யானை மாட்டிக்கிடுச்சு?'' என்று ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தான்.

அதிகாரி, கேசவன், முதலியோர் வேறு உதவியாட்களுடன் யானை விழுந்திருந்த இடத்துக்கு விரைந்தோடினர். சுமார் ஆறு மணி நேரம் கொடுத்தால் கூட போதும், யானை தப்பி ஓடிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதிலும் இந்த முரட்டு யானை அதற்கு முன்னால்கூடத் தப்பிவிடலாம்!

இந்த முரட்டு யானையிடம் வெறும் கையை நம்பிப் போகக்கூடாது என்று துரையின் தகப்பனார் தம்முடைய கைத் துப்பாக்கியையும் எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார். இன்னும் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்த துரையை மாதவன் சமாதானம் சொல்லி அங்கே அழைத்து வந்தான். துரைக்கோ, தான் ஏன் தங்கினோம் என்றிருந்தது.

குழிக்குள் இருந்த யானையைப் பார்க்க மிகவும் பயங்கரமாக இருந்தது. தன் தலையால் இடித்தும் கால்களால் மிதித்தும் குழியின் பக்கங்

படிப்பும் பாசாங்கும்!



போட்டோ: ஆர். கே. பி.

களை எல்லாம் துவம்சம் செய்து
விட்டு வெளியேற, எல்லையற்ற
ஆக்கிரோஷத்துடன் யானை
முயன்றுகொண் டிருந்தது.

வெகு தூரத்தில் நின்றவாறு
அந்த யானை செய்து வரும் துவம்
சத்தைப் பார்க்கவே துரைக்குப்பய
மாக இருந்தது. எந்த நிமிஷம் அது
வெளியேறிவிடுமோ, வெளியே
வந்துவிட்டால் என்ன கதியாகும்
என்று நினைக்கும்போதெல்லாம்,
அவன் உடம்பு வெட வெடத்தது.

அருகில் இருந்த பெரிய மரங்
களையெல்லாம் வெட்டிக் குழியைச்
சுற்றிப் போட்டார்கள். அது
தப்பி ஓட முடியாதபடி பல தடை
களைச் செய்துவிட்ட பிறகு,
கேசவன் குழியிலேயே யானைக்குத்
தீனி போட்டான்.

மூன்று நான்கு மணி நேரம்
பேய் பிடித்தது போல் போராடிய
பிறகு யானை சற்று அடங்கியது.
அதற்குப் பசியோ என்னவோ?
தன்னுடைய சிறைப்பட்ட நிலையை
மறந்து தீனி தின்ன ஆரம்பித்தது.

"யானையை இந்தக் குழியி
லிருந்து எப்படி வெளியே எடுக்
கிறது?" என்று மெதுவாகக்
கேட்டான் துரை. அவன்
இதயம் இன்னும் 'படபட'வென
அடித்துக்கொண் டிருந்தது!

"மொதல்லே அதை வடத்
தாலே கட்டணும்!"

"வடத்தாலே கட்டுறதா!
எப்படி?"

"குழியிலே கொஞ்சங் கொஞ்ச
மாத் தண்ணியை ஊத்துவாங்க.."

"ஊத்தினா?"

"அப்போ யானை தன் தும்பிக்
கையை உயரத் தூக்கிப் பிடிக்
கும். அப்போ சுருக்குப் போட்ட
வடத்தை தும்பிக்கை வழியா
கழுத்துலே மாட்டிடுவாங்க! அப்
புறம் ஒரு காலையும் இன்னொரு
வடத்தாலே தந்திரமாக் கட்டிடு
வாங்க...."

"தந்திரமா? எப்படி?...."

"சுருக்குள்ள வடம் ஒன்றைக்
குழியிலே போட்டு வைப்பாங்க.
பின்னங்காலை அதுக்குச் சரியா
யானை வக்கிறப்போ 'டக்'னு
அப்படியே இறுக்கிடுவாங்க!...."

சிறுவர்கள் பேசிக்கொண்
டிருக்கும் போதே மிகவும் வலு
வுள்ள நார்களாலான வடத்தால்
அந்தக் களிறு கட்டப் பட்டது.
பிறகு அந்தக் குழியில் மண் நிரப்
பப்படவே யானை அதிகக் கஷ்ட
மில்லாமல் குழியை விட்டு வெளி
யேறிவிட்டது.

அந்தச் சமயத்தில் அந்த வட்
டாரமே பல மைல்களுக்கு எதி

ரெயில் பெட்டியில்!

''சார், நீங்க எதுவரைக்கும்?''

''டிக்கட் பரிசோதகர் இந்தப் பெட்டிக்கு வந்து தாவும் வரையில்..!'' —வெ. ஆனந்தன்

ரொவிக்கும் வகையில் ஒரு பயங்கர சப்தம் கேட்டது. இதை எதிர்பாராத துரையின் மூச்சு சில விநாடிகள் நின்று விட்டது. சிறைப்பட்ட யானை போட்ட சப்தம்தான் அது!

அந்தக் கட்டுண்ட யானை மருண்டு ஓடப் பார்த்தது. ஆனால் கேசவன் தன்னால் பழக்கப்பட்ட வேறு சில யானைகளை அங்கு நிறுத்தி, இந்தப் புது யானையைக் கெட்டியாகப் பிடிக்கச் செய்தான். அந்தப் பழைய யானைகள், புதிய யானையின் வடங்களை நன்றாக இழுத்துப் பிடித்துக் கொண்டன.

அந்தச் சமயந்தான் அதிகாரி திடீரென்று கவனித்தார். இது அவர்கள் பிடிக்க விரும்பிய மதம் பிடித்த யானையல்ல; அதைவிடச் சிறிய யானை! கேசவனுக்கும் சற்று வியப்பாகவே இருந்தது— அந்த யானையா இவ்வளவு சுலபமாக அடங்கிவிட்டது என்று! ஆனால் பார்த்தால் இது சிறிதாக இருந்தது!

இப்போது இருவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை! ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு திரும்பினால்......

அந்தப் பயங்கரமான மதம் பிடித்த யானை அவர்கள் முன்னே வந்து நின்றுகொண்டிருந்தது!

தங்கள் கதை தீர்ந்தது என்று இருவரும் தீர்மானம் செய்தனர். அந்தப் பயங்கர யானைக்கு வேண்டிய இன்னொரு யானையைப் பிடித்து வைத்திருக்கும் போது, அது சும்மா இருக்குமா?

ஒரு கணத்தில் மாதவன் பாய்ந்தோடி வந்து, பழக்கப்பட்ட அவர்களுடைய யானைகளிடம், ''டுமியா!'' என்று சொன்னான். உடனே அந்த இரண்டு யானைகளும், புதிய யானையின் வடத்தை விட்டு, மதம் பிடித்த அந்தப் பிரமாண்டமான பெண் யானையை வளைத்துக்கொண்டதைப் போல நின்று கொண்டன. அதற்குள் இன்னொரு பழகிய யானை மதம் பிடித்த பெண் யானையின் முகத்துக்கு நேராக முகம் வைத்தவாறு எதற்கும் தயாராக நின்றது.

எந்த விநாடியும் பூகம்பம் நேரலாம்! துவம்சம் எந்த எல்லையில் இருக்கப் போகிறது?

ஆனால் மதம் பிடித்த களிறு அப்படி ஒன்றும் காட்டுத்தனமாக நடந்து கொள்ளவில்லை. தன்னுடைய துதிக்கையைத் தூக்கிச் சலாம் செய்தது! இதுதான் சமயம் என்று ஒரு சில விநாடிகளில், கழுத்தில் ஒரு வடத்தைப் போட்டு அதையும் கட்டினான் கேசவன். அவனுடைய கையாள் அதன் காலுக்கும் ஒரு வடத்தை மாட்டினான்.

தன்னுடைய குழந்தையான சிறு யானையே அகப்பட்டு விட்ட பிறகு, தனக்குச் சுதந்தரம் இனி எதற்கு என்று, தானாகவே சிறைக்குள் புகுந்து கொள்வது போல, சுமார் எட்டு டன் எடையுள்ள அந்தத் தாய் யானை தானே விலங்கை மாட்டிக் கொண்டது.

கேவலம் மிருகங்களிடம் இருந்த அன்பின் பிணைப்பைக் கண்டு துரை மாத்திரம் ஆச்சரியப்பட, மாதவனும் வியப்படைந்தான். கொடிய மிருகமாகவே இருக்கட்டும். அந்தத் தூய தாய்மை உணர்ச்சியோ, பெற்ற பாசமோ மறைந்தா போய்விடும்?

அவர்கள் அவனை இழுத்துச் செல்லும் வழியில் இதுவரை கண்ணுக் குப் புலப்படாமல் இருந்த குடிசைகளிலிருந்து கும்பலாக, தழைகளைக் கட்டிய அரை நிர்வாண ஆண் பெண்கள் வெளிவந்து பார்க்கிறார்கள்...

கடைசியில் புகை தெரிந்த மலையடிவாரத்தின் அடியில் கடற்புலியைக் கொண்டு போய் நிறுத்துகிறார்கள்........

சிலர் கொம்புகள் போன்ற குழல் எடுத்து ஊதுகிறார்கள். தப்பு அடிக்கிறார்கள். அவர்கள் தலைவன் கம்பீரமாக ஒரு பாறையில் வந்து அமரு கிறான். குற்றவாளி போல் கடற்புலி கம்பத்தில் கட்டப்பட்டு நிற்கிறான்...

நான் அந்நியன். உங்களோடு எனக்குச் சண்டையில்லை. புயலில் சிக்கி, உயிர் பிழைத்தவன். என்னைத் தயவு செய்து விட்டு விடுங்கள்!
ஹோ வரா!
ஹோ! வரா!
ஹோ! வரா!
கூட்டத்தில் ஒரு கிழவன் முன்வந்து தலைவனைப் பார்த்து கையை தூக்கி . . . .
வரா ஹோ! வரா ஹோ! வரா ஹோ!
பேசாமல் இரு. இவர்களுக்கு நீ பேசுவது புரியாது. நான் கேட்பதற்கு நீ பதில் சொல்வது போல் சொல். நான் பார்த்துக் கொள்கிறேன்.
பெரியவரே! நன்றி!

கிழவர் கடற்புலியின் வரலாற்றைக் கேட்டுவிட்டு....
நானும் உன் நாட்டைச் சேர்ந்தவன் தான்! தந்திரத்தினால் தான் இவர்களை வெல்ல வேண்டும்! உனக்குக் கத்திச் சண்டை தெரியுமா?
தெரியும்
உடனே கிழவன் தலைவனைப் பார்த்துக் கூச்சலிடும் போது தலைவன் சமிக்ஞை செய்கிறான்....
ஹா, ஹோ! ஹா, ஹோ!
அடுத்த கணம் பயங்கரமான ஒரு காட்டுமிராண்டி பெரிய வாளுடன் நடுவே வந்து நிற்க, சிலர் கடற்புலியின் கட்டை அவிழ்த்து விடுகிறார்கள்.
ஹா! ஹோ! உம்
தலைவன் உத்திரவின்படி ஒருவன் வாளை நீட்டுகிறான்.

(தொடரும்)

கடைசி பஸ்

சம்பந்தம்

அப்பாவின் மனம் திரும்பத் திரும்ப அதைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்தது. எப்படியும் வார்த்தை தவறக்கூடாதல்லவா!

சென்ற தீபாவளியின் பொழுதே, 'அவசியம் அடுத்த தீபாவளிக்கு உனக்கு மோதிரப் பரிசு அனுப்பி வைக்கிறேன்!' என்று மாப்பிள்ளைக்கு வாக்களித்திருந்தார். அதற்கப்புறம் அம்மா இறந்து குடும்பத்தில் எத்தனையோ துன்பச் சுழல்கள்! இருந்தும் வாக்குறுதியை மாத்திரம் அவர் மறக்கவேயில்லை.

பணத்தை எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு விடுவிடென்று கடைத்தெருவுக்குச் சென்றார். புதுத் தினுசான மோதிரங்களையே தேடினார். ஒன்றும் சரியாய்க் கிடைக்கவில்லை. கடைசியில் பழைய தினுசாயிருந்தாலும் பரவாயில்லை என்று முக்கால் சவரனில் கல்குண்டு மாதிரியிருந்த ஒரு மோதிரத்தை வாங்கிக் கொண்டு திரும்பினார்.

விடிந்தால் தீபாவளி. அதற்குள் அந்த மோதிரத்தை வழுதாவூரிலிருக்கும் மாப்பிள்ளையிடம் சேர்ப்பித்தாக வேண்டுமே! 'அவனிடம் கொடுத்தனுப்பலாமா அல்லது இவனிடம் கொடுத்தனுப்பலாமா?' என்று யார் யாரையோ எண்ணினார். இருந்தும் தங்க மோதிரத்தை அந்நியர்களிடத்தில் கொடுத்தனுப்ப அவர் மனம் சற்றுத் தயக்கம் காட்டியது.

கடைசியில் 'சரி, நம் பையன் சேகர் மூலமே அனுப்பி வைப்போமே!' என்று தீர்மானித்தார்.

அன்று மாலை வெகு நேரம்வரை விளையாடிவிட்டு அப்பொழுதுதான் வீடு திரும்பினான் சேகர். நேரம் கழித்து வந்ததற்காக வழக்கமாய்க் கடிந்துக்கொள்ளும் அப்பா அன்று அப்படி நடந்து கொள்ளவேயில்லை. பிரியமாய் வரவேற்றார். ''உனக்கு ஒரு செய்தி வெச்சிருக்கேன். சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு வாடா'' என்று புதிர் போட்டார் அவர்.

பையனுக்கு உற்சாகம் பொங்கி வழிந்தது. சரியாய்க்கூட கைகால் அலம்பவில்லை. சாப்பாட்டை இரண்டே வாயில் வழித்துப் போட்டுக்கொண்டு ஓடி வந்தான்.

''இப்போ வழுதாவூருக்குப் போகவேணும்டா!'' என்றார் அப்பா. ''நாம் எல்லோருந்தானே?'' என்றான் சேகரன்.

''இப்போ நான் வரமுடியுமா? நீ மாத்திரந்தான் போய்விட்டு வர வேண்டும்.''

''நான் மாத்திரமா! தனியா நீங்க இல்லாமே நான் எப்படிப் போறது!' என்று லேசாய்த் தலை குனிந்தான் சேகர். அவன் குரலில் அச்சம், பயம், ஒரு வித சங்கோஜம் எல்லாம் ஒருங்கே சேர்ந்து குமிழியிட்டன. அதுவரை அவன் அப்படித் தனியாய்ச் சென்றது கிடையாது!

''இதோ பார், சேகர்! நீ வர வர பெரியவனாகிக் கொண்டு வரவில்லையா? வெற்றிலைக் கட்டுகளை ஏற்றிக்கொண்டு, கடைசிப் பஸ் ஒன்று போகிறது பார். அதில் ஏற்றிவிடுகிறேன் உன்னை. நேரே வழுதாவூருக்குச் சென்று இறங்கி விடலாம். அதற்குள் பொழுது நன்றாய் விடிந்துவிடும். பிறகு என்ன பயம்?'' என்றார் அப்பா.

அதோடு, ' 'அத்தானுக்குத் தீபாவளிப் பரிசாக ஒரு தங்க மோதிரம் வாங்கி வைத்திருக்கிறேன்'' என்று தாழ்ந்த குரலில் சொல்லி, அதைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு, உடனே நீ திரும்பிவிடலாம். ராஜா இல்லே!'' என்று தாடையை வேறு அன்பாய்த் தடவிக் கொடுத்தார்.

சேகரனுடைய குனிந்த தலை நிமிரவேயில்லை. "தங்க மோதிரத்தோடு தனியாகப் போகச் சொல்றீங்களே!" என்றான். மனத்தில் தோன்றிய அச்சம் அவன் குரலில் நிழலாடியது.

"அதெல்லாம் ஒண்ணும் பயமில்லே. நீ மோதிரம் வைத்திருப்பது யாருக்குத் தெரியப் போகிறது? சரி சரி, வேளையோடு படுத்துக் கொள்ளப் போ. இரவு அகாலத்தில்தான் அந்தப் பஸ் இந்தப் பக்கம் வரும். இப்பொழுதே போய்ச் சொல்லி விட்டு வருகிறேன். வாசலிலேயே நிறுத்தச் சொல்லிவிட்டு, இப்படியே உன்னை ஏற்றிவிடுகிறேன்" என்று தீர்மானமாய்ச் சொல்லிவிட்டு வெளியே சென்றார் அப்பா.

அதன் பிறகு அவன்தான் என்ன செய்வான்!

அப்பா வெளியே சென்றதும், சேகர் பக்கத்துவீட்டுப் பையனோடு கலந்து பேசினான். "அப்பாவே சொல்லும்போது என்னடா செய்கிறது? போய்த்தானாக வேண்டும். ஜாக்கிரதையாய்ப் போ. மோதிரம் வேறு கொண்டுபோகிறாய். வழியிலேயே எவனாவது உன் கழுத்தை நெரித்துவிட்டு, பிடுங்கிக் கொண்டுவிடப் போகிறான்! துளிக்கூட கண்ணை மூடாமல், பையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு போய்ச் சேர்" என்று யோசனை சொல்லி அனுப்பினான் அவன். "சரி. அப்படித்தான் செய்கிறேன்" என்று படுக்கச் சென்றான் சேகர்.

ஆனால் தூக்கம் வந்தால் தானே! ஏதேதோ எண்ணங்கள்! ஏதேதோ கற்பனைகள்! பாவம், பன்னிரண்டு வயதுப் பாலகன் தானே!

கடைசியில் தூக்கம் அவன் கண்களைத் தழுவியது. அந்தச் சமயத்தில்தான் அப்பா அதட்டி எழுப்பினார் அவனை. கண் விழித்துப் பேந்தப் பேந்த விழித்தான் சேகர். "எழுந்திருடா, வாசலில் பஸ்ஸை நிறுத்தியிருக்கேன்" என்றார்.

உடனே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். முகத்தைத் துடைத்துக்கொண்டு பிரயாணத்திற்குத் தயாரானான்.

"எல்லாம் இந்தப் பையினுள் வைத்திருக்கேன். ஜாக்கிரதை!" என்று அவன் காதோடு காதாய்ச் சொல்லி, பஸ் ஏற்றிவிட்டார் அப்பா. "பையனைக் கொஞ்சம் கவனிச்சிக்கோ. உன்னை நம்பித்தான் தனியாய் அனுப்புகிறேன்" என்று டிரைவரிடமும் சொன்னார். "அதெல்லாம் வழுதாவூர் வந்ததும் நான் கணக்காய் இறக்கி விட்டுடறேன். நீங்க போங்க!" என்றான் அவன். "ராஜா! இப்படி வந்து உட்கார்ந்துக்கோ" என்று அன்

பட்டினத்து மனிதர்: ஏனப்பா, இப்போது மணி பன்னிரண்டுக்கு மேலே இருக்காது?

பட்டிக்காட்டான்: இந்த ஊரிலே மணி பன்னிரண்டுக்கு மேலே பதிமூனு ஆகிறதேயில்லே, சார்!

பாய்ச் சேகருக்கு, உள்ளே உட்கார இடமும் காட்டினான்.

உடனே பஸ் புறப்பட்டது. அப்பா உள்ளே வந்து படுத்தார்.

அப்பொழுது அவருக்கும் மனசு சரியாகவே யில்லை. 'பாவம்! ரொம்பவும் அச்சப்பட்டுக் கொண்டே போகிறான் சேகர். நாம்கூட இப்படி அவனைத் தனியா அனுப்பிச்சிருக்க வேண்டாம். இன்னும் இரண்டு நாளைக்கப்புறம் மாப்பிள்ளையை இங்கேயே வரவழைத்துத் தீபாவளிப் பரிசை நாமே நேரில் கொடுத்திருக்கலாம். சே! சே! இந்த யோசனை அப்போ வராமல் போய் விட்டதே!' என்று பலமாய் முணுமுணுத்துக் கொண்டே கண்களை மூடினார். ஆனால் தூக்கம் வந்தால்தானே!

சேகர் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை ஒரு லாரி என்றுகூடச் சொல்லலாம். அது ஒரு பழைய காலத்து மாடல் பஸ். இப்பொழுது உட்காரும் 'ஸ்பிரிங்' மெத்தைகளைச் சுருட்டிப் போட்டுவிட்டு, வெற்றிலைக் கட்டுகள் ஏற்றுவதற்கென்று வைத்துக் கொண்டார்கள். இருந்தும் சமயத்தில் இப்படி ஓரிருவரை அதுவும் இரவு வேளையில் ஏற்றிச் செல்கிற வழக்கமுண்டு. வந்த வரைக்கும் ஆதாயம். ஏதோ டிரைவரின் கைச் செலவுக்கு ஆகுமல்லவா?

பஸ் 'லொட லொட' வென்று போய்க்கொண்டிருந்தது. சேகருக்குத் தூக்கமெல்லாம் அடியோடு கலைந்துவிடவே, கொட்டுக் கொட்டென்று உட்கார்ந்துக்கொண்டிருந்தான்.

வழியில் இரண்டொரு இடங்களில் வண்டி நின்றது. தொப் தொப்பென்று வெற்றிலைக் கட்டுகளைக் கொண்டுவந்து போட்டார்கள் ஆட்கள். அந்தப் பஸ்ஸே அதிர்ந்தது.

சற்று நேரங்கழித்து மழைவேறு படபடவென்று வந்தது. ஆனால் அந்தப் பஸ் என்னவோ ஒரே கதியில் போய்க்கொண்டுதானிருந்தது. அந்தப் பக்கத்தில் பாதையில்லை. குண்டு குழிகளில் பஸ் விழுந்து எழுந்தது. ஓரிரு தடவை சேகர் பக்கத்துக் கம்பியில் மோதிக் கொண்டான்.

அப்பொழுது மணி ஒன்றிருக்குமோ அல்லது இரண்டு இருக்குமோ! சேகரின் கண்கள் களைத்துப் போய் லேசாய் மூடின.

ஆனால் அப்பொழுது பஸ் ஆடிக் குலுக்கிக் கொண்டு நிற்கவே, விழித்துக் கொண்டு விட்டான். டிரைவர் இறங்கிப் போய், அங்கிருந்த அம்மன் கோயில் உண்டியில் ஏதோ சில்லறையைப் போட்டுவிட்டு வந்து ஏறினான். உடனே 'டப் டப்' பென்று பஸ் புறப்படுவதற்கு உறுமியது. லேசாய் நகர்ந்துகூட விட்டது.

அப்பொழுதுதான், ''ஐயா! டிரைவர் ஐயா! கொஞ்சம் நிறுத்துங்கோ'' என்று கூவிக்கொண்டே யாரோ ஓடிவருவதாகத் தெரிந்தது. டிரைவர் எட்டிப் பார்த்தான். ''யாரையா அது? ஓடிவந்து தொத்திக்கொள். இப்போ நிறுத்தினால், பிறகு 'ஸ்டார்ட்' பண்ண முடியாது!'' என்று கத்தினான்.

அப்படியே சற்று நேரத்திற்குள், ஒரு தடித்த உருவம் இரைக்க இரைக்க ஓடிவந்து தொத்திக் கொண்டது. சற்றுக் கூர்ந்து பார்த்த டிரைவர், ''அட, அம்மன் கோவில் பூசாரி! நான்தான் வழக்கப்படி அங்கே நிறுத்திப் புறப் பட்டேனே, அப்பொழுதே வந்து ஏறிக்கப்படாதா?'' என்றான். கொல்லன் துருத்திபோல் பெருமூச்சு விட்டுக்கொண்டே, ''அப்படியே கண்ணை யிழுத்துக்கொண்டு போய்விட்டது'' என்று ஒரு விதமாய் இளித்துக்கொண்டே உள்ளே வந்தான் அந்தப் பூசாரி.

அவனைப் பார்க்கவே பயங்கரமாயிருந்தது சேகருக்கு. தொப்பையும் தொந்தியுமாய், தாடி மீசையுடன் ஏதோ கடோத்கஜன் மாதிரியல்லவா இருந்தான் அவன்! முழங்கைக்குமேல் ஏதோ பெரிய தாயத்துக் கட்டிக்கொண்டு கழுத்தில் பல மணி மாலைகளை யெல்லாம் போட்டுக்கொண் டிருந்தான் அவன். நெற்றியிலோ பட்டைச் சந்தனத்துக்கு நடுவில் பெரிய குங்குமப் பொட்டுத் திகழ்ந்தது. ஏதோ அபாய அறிவிப்புப் போலல்லவா இருந்தது சேகருக்கு அது!

''இது யாரு பையன்?'' என்று கேட்டுக்கொண்டே சேகரின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு விட்டான் அவன். உடல் நடுங்காவிட்டாலும், உள்ளம் நடுங்கியது சேகருக்கு.

'சரிதான் பக்கத்து வீட்டுப் பையன் சொன்னது சரியாகிவிட்டது. இவன் நம்ம கழுத்தை நெரிச்சி, மோதிரத்தைப் பிடுங்கிக் கொள்ளத்தான்' என்றதுபோல் அந்தத் தடிப் பூசாரியையும் அவன் பார்வையையும் கண்டு ஜிவு ஜிவு என்று ரத்தம் உறைவது போலிருந்தது சேகருக்கு.

சற்று நேரத்திற் கப்புறம் ''நகர்ந்துக்கோ!'' என்று கடுங் குரலில் சொன்னான் பூசாரி. உடனே கைப் பையைத் தலைக்கு வைத்துக் கொண்டு, அந்தச் சங்கடமான இடத்திலும் தன் உடலை நீட்டி விட்டான்.

இருந்தும், படுத்துக்கொண்டே தன் பையை ஏதோ துழாவது போலிருநதது சேகருக்கு. வெடுக்

கென்று தன் பையை எடுத்து வேறு பக்கம் இடுக்கிக்கொண்டு திரும்பிக்கொண்டான். கண்களை மூடிக்கொண்டே ஏதேதோ எண்ணவே, அப்படியே கண்ணயர்ந்து விட்டான் சேகர்.

வெகு நேரங்கழித்துச் சேகர் கண் விழித்தான். தன் கைப் பை நழுவிக் கீழே விழுந்துகிடந்ததைக் கண்டு மிகுந்த பரபரப்புற்ருன். வெடுக்கென்று எடுத்துக் கையை விட்டுப் பார்த்தான். மோதிரத்தைக் காணுமே! 'ஐயையோ!' என்று கத்தினுன். ஆனுல் அவன் குரல் எழவேயில்லை. அப்பா பேச்சைக் கேட்டுக்கொண்டு வந்து, இப்படியும் ஆகவேண்டுமா! கண்களில் நீர் முட்டியது சேகருக்கு.

ஆனுல் அந்தப் பொல்லாத பூசாரி, மோதிரத்தைத் திருடிக் கொண்டதுமல்லாமல், அயர்ந்து தூங்குவதுபோல் பாசாங்கு செய்துகொண் டிருந்தானே! அப்படியே அவனைக் கல்லாகவோ அல்லது மண்ணுகவோ சபித்துவிட்டால் தேவலை என்றிருந்தது சேகருக்கு. அப்படிக்கூட முடியுமா!

'இப்பொழுது வெறுங் கையோடல்லவா ஊரில் போய் நிற்க வேண்டும்?' என்று ஆகாயத்தை வெறிக்கப் பார்த்தவாறு ஏங்கினுன் சேகர். அப்பொழுது பின்னுல் ஏதோ அரவம் கேட்கவே சேகர் திரும்பிப் பார்த்தான்.

அந்தத் தடிப் பூசாரி எழுந்து உட்கார்ந்துக்கொண்டு திமிர் விட்டுக்கொண் டிருந்தான். அப்படியே அந்தப் பக்கமாக நகர்ந்து வாயிலிருந்த எச்சிலைத் துப்பி விட்டு வெளியே வெறிக்கப் பார்க்கத் தொடங்கினுன் அவன்.

அப்பொழுது பளிச்சென ஓர் எண்ணம் உதித்தது சேகருக்கு. திருடிய மோதிரத்தைப் பையினுள்ளேதானே வைத்திருப்பான்? அவன்தான் அந்தப் பக்கமாகவே பார்த்துக்கொண் டிருக்கானே! அதற்குள் பக்கத்தில் கிடக்கும் அவன் பையில் கையைவிட்டுப் பார்த்து விட்டால்..! அவன் எண்ணம் எழுந்து விடுவதற்குள், வெடுக்கெனச் சேகரின் கை பூசாரியின் பையினுள் புகுந்தது. அதோ மோதிரம் கிடைத்து விட்டதே! டக்கெனத் தன் பையில் எடுத்து வைத்துக்கொண்டான் சேகர்.

அதே சமயத்தில் அந்தப் பூசாரியும் இந்தப் பக்கம் திரும்பி விட்டானே! 'ஐயையோ! தொலைந்தோம் நாம்!' குப்பென்று வியர்த்து விட்டது சேகருக்கு. அதோ தன் பையை எடுத்துக் கையை விடுகிருனே அந்தப் பொல்லாத பூசாரி. 'ஆ! தெய்வமே!' என்று அப்படியே கண்களை மூடிக் கொண்டான் சேகர்.

லேசாய்க் கண்களைத் திறந்த பொழுது அந்தப் பூசாரி, பையிலிருந்து புகையிலையை யல்லவா வெளியே எடுத்துக் கொண்டிருந்தான்! அப்படியே முறுக்கி வாயில் போட்டுக் கொண்டு குதப்பினுன் அந்தத் தடியன்.

என்ன இருந்தாலும் அடுத்த தடவை பையில் கைவிடும் பொழுது தெரியாமலா போய் விடும்? அதற்குள் இந்தப் பஸ் வேகமாய் ஓடி வழுதாவூர் போய்ச் சேர்ந்துவிடக் கூடாதா! சேகரின் இருதயம், கோடித் தெரு நெல் மெஷின் மாதிரி 'பக் பக்' கென்று அடித்துக் கொண்டது அப்பொழுது.

அதோ பல பலவென்று விடியத் தொடங்கி விட்டதே! வெகுவாகத் தன்னையே சுதாரித்துக்கொண்டு, "வழுதாவூர் நெருங்கி விட்டதா?" என்ருன் சேகர். "இதோ அடுத்தாற்போல் வழுதாவூர்தான்" என்ருன் டிரைவர்.

ஆமாம். ஆமாம். அதோ கோயில் கோபுரம் தெரிகிறதே! இதோ கடைத்தெருகூட வந்து விட்டதே! உடனே பஸ்ஸும் நின்றது. அவசரமாய் இறங்கினுன் சேகர். ஆனுல் அதோ அந்தப் பூசாரி பின்னுல் பிடித்து இழுப்பது போலிருக்கிறதே! அப்படியொன்று மில்லை. வீண் மனப் பிரமைதான். அதற்குள் பஸ் நகர்ந்து விட்டது.

'அப்பாடி! தப்பித்தோம்!' என்றிருந்தது சேகருக்கு. ஆனுல் அதற்குள் அந்தப் பஸ் சற்றுத் தூரம்

சென்று நிற்பானேன்! ஒருவேளை இப்பொழுதுதான் அந்தத் தடியன் திருட்டு மோதிரத்தைத் தேடியிருப்பானே! உடனே குறுக்குச் சந்தினுள் புகுந்து வேகமாய் நடக்கத் தொடங்கிவிட்டான் சேகர்.

தெருமுழுவதும் தீபாவளிப் பட்டாஸ் படார் படார் என்று வெடித்துக்கொண் டிருந்தது. அவர்கள் வீட்டில் தீபாவளிப் பலகாரங்கள் செய்யும் வாசனையும் காற்றில் மிதந்து வந்து சேகரின் மூக்கைத் துளைத்தது.

திரும்பிக்கூடப் பாராமல், சீக்கிரத்தில் தன் அக்காள் வீட்டையடைந்து விட்டான் சேகர். எதிர்பாராது தம்பி வந்தது குறித்து அக்காளுக்கு அளவில்லாத சந்தோஷம். ''வா, தம்பி!'' என்று அன்போடும் ஆச்சரியத்தோடும் வரவேற்றாள். ''ஆமாம். அத்தானுக்குத் தீபாவளிப் பரிசு அனுப்பி வைத்தார் அப்பா'' என்றான் சேகர்.

உடனே ஒரு பெரிய தட்டு கொண்டுவரச் சொன்னான். தன் பையிலிருந்த பழம் புஷ்பம் வெற்றிலைப் பாக்கு எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்து வைத்து விட்டு, மோதிரத்தை எடுக்கப் பையில் கை விட்டான் சேகர்.

அதே சமயத்தில் வாசலில் 'டிரிங், டிரிங்' என்று சைக்கிள் மணி அடித்தது. 'என்ன விசேஷம்! நம் அப்பா ஆபீஸ் பியூன் வருகிறானே' என்று சற்று நிமிர்ந்தான் சேகர்.

''உங்க அப்பா, பையில் எல்லாவற்றையும் எடுத்துவைத்துவிட்டு, கடைசியில் மாப்பிள்ளைக்கு வாங்கிய மோதிரத்தை வைக்க மறந்துட்டாராம். அப்புறம் அந்நேரத்திலே என்னைக் கூப்பிட்டனுப்பிக் கொடுத்தனுப்பினார். காற்றாகப் பறந்து வந்தேன்'' என்று சொல்லிக்கொண்டே, அந்தத் தங்க மோதிரத்தை எடுத்துத் தாம்பளத்தில் வைத்தான் அந்தப் பியூன்.

'ஐயையோ! அப்படி யென்றால் பூசாரியின் பையிலிருந்து எடுத்த இந்த மோதிரம்!' தலை சுழன்றது சேகருக்கு. பையில் கைவிட்டபடி அப்படியே திகைப்பிலாழ்ந்து அமர்ந்துவிட்டான் சேகர்! அவன் கையிலிருந்த பித்தளை மோதிரம் இரண்டு நயா பைசாகூடப் பெறாது என்று அப்புறமல்லவா அவனுக்குத் தெரியப் போகிறது!

கார் காலம்...

தமிழ் ஒளி

மின்னல் மின்னி
இடி இடித்து
மேகம் வந்தது!
மெல்ல மெல்ல
மழை பிடித்து
மிகவும் பெய்தது!

கன்னங் கரிய
இருட்டு வந்து
கவ்விக் கொண்டது!
காட்டு நரிபோல்
ஊளை யிட்டுக்
காற்று வந்தது!

குளிர் பிடித்த
மரங்க ளெலாம்
குனிந்து கொண்டன!
குருவி காக்கை
எல்லாம் எங்கோ
பதுங்கிக் கொண்டன!

வெளியிற் செல்ல
முடிய வில்லை!
கூதல் வெட்டுது!
'வேண்டும் வேண்டும்'
என்று மழை
மீண்டும் கொட்டுது!

மலர் மாலை

"கண்ணன் மலரைக் கண்டோம். அந்த வண்ண மலரின் மணத்தை நுகர்ந்தோம். களித்தோம். புதுமை பொலியும் கண்ணன் மலர் வாடாமலர் எனத் தெளிந்தோம்." —சொ. மீனாட்சி, மதுரை.

"கண்ணன் தீபாவளி மலரைப் படித்துப் பெருமகிழ்வு எய்தினோம்."
—கோ. அரங்கநாதன், பரமக்குடி.

"கண்ணன் மலர் நன்றாக இருக்கிறது."
—ஆர். அவ்வை, தில்லைநகர், திருச்சி.

"வெண்ணெயைத் திருடும் கண்ணனை அட்டையாகக் கொண்ட கண்ணன் மலர் நம் இதயத்தையும் நம்மையறியாமலே மெல்லத் திருடி விடுகிறது." —கஸ்தூரி, சென்னை - 5.

"கதைகள் கருத்தைக் கவர்ந்தன. வர்ணப் படங்கள், புகைப் படங்கள் எல்லாம் புதுமையாக இருந்தன. எல்லாமே அருமை, அருமை!"
—கே. ஏ. முகம்மது அலி, சிதம்பரம்.

"மிக மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளது கண்ணன் மலர். கண்ணனுக்கு எங்கள் பாராட்டுகள்." —ப. ரா., ரிஷிவாலி.

"கண்ணன் மலரைக் கண்டேன். படித்தேன். தெவிட்டாத தேன் போல் இனித்தது." —ஏ. பி. குருசாமி, தென்காசி.

"கண்ணன் மலர் உண்மையிலேயே வாடாமலர்; மணம் வீசும் மலர். லெமன் பாட்டும், சசிதேவன் பாட்டும் பாடப் பாட இனிக்கின்றன."
—ஆர். சரஸ்வதி, நாகர்கோயில்.

"வளரும் எழுத்தாளர் புகைப்படங்களைப் பிரசுரித்திருப்பது அவர்களது சலியா ஊக்கத்துக்கு ஆக்கம் அளிப்பதுபோலக் கருதுகிறேன்.
—ஜோவலன்வாஸ், கொழும்பு - 15.

"தெவிட்டாத தேன் விருந்தாக அமைந்திருக்கிறது மலர்."
—இரா. மு. கிருஷ்ணராஜன், திருப்பத்தூர் (வ. ஆ.)

"மலரைக் கண்டு பரவசமடைந்தேன்."
ஏ. ந. கணபதி, பெரியாறு பிராஜக்ட்.

கொள்ளைவெறி ஊட்டாமல்
கொலை பயமும் காட்டாமல்
வெள்ளை மனம் விரசங்கொள்
வெறுஞ் சினிமாக் கதையின்றி
சின்னஞ் சிறார்களின்
சீருடை வாழ்வுக்கு
நன்னெறி காட்டுகின்ற
நற்கருத்தை மொழிகின்றான்;
வண்ணமிகு படங்கள்
வார்த்தைக்கு அடங்கவில்லை.
எண்ணமெல்லாம் இனிக்கின்ற
எழில் வடிவே கண்ணன் என்பேன்.
கன்னலும் ஈடில்லை;
கனிரசமும் ஈடில்லை;
என்னரும் கண்ணன்
இயம்பிடும் மழலைக்கே! —'கேசு', பாகவதபுரம்.

[மலரைப் பாராட்டி வந்து குவிந்துள்ள கடிதங்களையெல்லாம் இங்கே வெளியிட இயலவில்லை. ஏதோ நாலைந்தை மட்டும் மேலே வெளியிட்டிருக்கிறோம். மற்றவர்களுக்கெல்லாம் எங்கள் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தனித் தனியே பதில் எழுதாமைக்கு மன்னிக்கவேண்டும். ஆசிரியர்.]

புகைப்படம்

திருச்சி அண்ணா

பாத்திரங்கள்:

அங்கப்பன் — ஈசுவரன்
ஆடியபாதம் — உலகநாதன்
இதயராஜ் — ஏகாம்பரம்
கல்யாணம்.

காட்சி 1

[அங்கப்பன் வீடு. முன் வாசல் அறை. இளந்தளிர் இளைஞர் சங்கத்து மெம்பர்கள் கூடியிருக்கிறார்கள்.

அங்: நாளுக்கு நாள் நம்முடைய இளந்தளிர் இளைஞர் சங்கத்தின் பேரும் புகழும் ஓங்கி வளர வேண்டும். இதுக்கு என்ன வழி இதயராஜ்?

இத: பேரும் புகழும் எதுக்கு, மிஸ்டர் அங்கப்பன்?

அங்: பேரும் புகழுமே இந்தக் காலத்து வாழ்வு. நமது சங்கத்தின் பேர் ஓங்கினால்தான் புகழ் உண்டு. பூங்கொடி போல் சங்கம் வளர வேண்டும். அதன் புகழ் பரவவேண்டும். இப்போது குடத்து விளக்குப் போல இருக்கு நம்முடைய சங்கம்.

உல: ஆமா மிஸ்டர் இதயராஜ், கண்ணும் காதும் வச்ச மாதிரி நடக்குது இளந்தளிர் இளைஞர் சங்கத்தின் கூட்டம். இது கூடாது; கூடவே கூடாது.

ஈசு: மதில்மேல் பூனையா இருக்கு உங்க பேச்சு. இதன் உள்நோக்கம் என்ன? மிஸ்டர் ஆடியபாதம், உனக்குப் புரியுதா?

ஆடி: ஈஸ்வரனுக்குத் தான் வெளிச்சம்.

ஈசு: இந்த ஈஸ்வரனுக்குப் புரியலையே. அதான் கேட்டேன்.

ஆடி: மிஸ்டர் இதயராஜ், நமது செயலாளர் அங்கப்பனுடைய விருப்பம்தான் என்ன? நமது சங்கத்தின் நடவடிக்கை வேறே எப்படி நடக்க வேண்டுமாம்? சண்டை சச்சரவு ஏதாவது நடக்க வேண்டுமா? அடிதடி கலாட்டாவிலே முடியணுமா கூட்டம்? காத்திரு; கண்டு களிக்கலாம். அதுக்கு நான் ஏற்பாடு செய்யறேன்.

இத: மிஸ்டர் அங்கப்பன், நம்ம ஆடியபாதம் எப்போதுமே எதிர்க்கட்சி. அந்த அபிப்பிராயத்தைக் காதிலே போடலாமா? போட்டா, அது வலுத்துப் போகாதா? உன் யோசனை என்ன?

அங்: நமது சங்கம் எப்போதும் போல, ஒழுக்கம் கெடாமல் நடக்க வேண்டும். பணி செய்து கிடப்பதே கடன். ஆயினும், நம்மைப் பற்றிப் பிறர் அறிய வேண்டாமா? நமது பணி இந்த ஊரில் பிரபலம் அடைய வேண்டாமா?

உல: இந்த ஊரிலே மட்டுமல்ல, வெளியூர்களிலேயும் நம்ம பேரு அடிபடணும். இதுவே அடியேன் அபிப்பிராயம்.

இத: இதற்கு விளம்பரமே தகுந்த வழி! விளம்பரம் செய்! வியாபாரத்தைப் பெருக்கு. இதுவே புது மொழி.

ஆடி: மிஸ்டர் இதயராஜ், விளம்பரமாக ஒரு வழி விளம்பட்டுமா?

அங்: விளம்புக, மிஸ்டர் ஆடி.

ஆடி: சங்க மெம்பர்கள், தலைக்கு ஒரு தம்பட்டம் எடுத்துக் கட்டிக்கொண்டு, தெருவிலே தட்டிக்கிட்டே நடக்கலாம்.

இத: பிரமாதமான யோசனை! அந்த ஆடி ஐயா தலையிலேயே முதல் தம்பட்டத்தைக் கட்டுங்க.

ஆடி: ரைட்டோ! பின்னாலே நடந்து வாங்க. பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டா, இப்படித்

தான் ஏதாவது ஏற்பாடு செய்யணும். நாம் பாடுபடுவது பேருக்காக அல்ல, அன்பர்களே, வெறும் புகழுக்காகவா? அல்ல. பெருமைக்காகவா? அல்ல! பட்டம், பதவிக்காக அல்ல! பணி செய்கிறோம். பணி செய்து கிடப்பதே, நமது கடன்!

உல: (கிண்டலாக) பலே, பலே! மிஸ்டர் ஆடியபாதம் கொன்னுட்டான். அழகான சொல்லோவியம்! உங்க அபிப்பிராயமென்ன, இதயராஜ்?

இத: அதேதான். கொன்னுட்டான், கொன்னு.

அங்: மெம்பர்கள் கருத்து என்ன?

[‘அதேதான், தேதான்’ என்று ஆமோதிக்கிறது கூட்டம்]

ஈசு: மிஸ்டர் ஆடி, காபிக்குச் சொல்லுங்க.

ஆடி: அட ஈசுவரா, காபி எதுக்கு?

இத: குடிக்கத்தான். போன மீடிங்கிலேயே வெளுத்துக் கட்டினவன் நீ. அப்பவே காபி வழங்க வேண்டியது. அடாடா! என்ன பேச்சு நயம்! என்ன சொற்கட்டு! சொற் செட்டு! காபி ஆர்டர் பண்ணட்டுமா?

ஆடி: வேறே ஜோலி இல்லையா உங்களுக்கு? இது போல் கொம்பு சீவறது, ஆளைக் குளிப்பாட்டுவது, பூச்சுத்தி விடுவது, இந்த விவகாரமெல்லாம் எங்கிட்டே நடக்காது.

அங்: மிஸ்டர் ஆடி, ப்ளீஸ்! சூடேற வாண்டாம். காபி தர வேண்டியதில்லை. இதென்ன, உங்களுக்குத் தமாஷே பிடிக்க மாட்டேங்குது?

இத: பிடிக்காமெ என்ன? நல்லாப் பிடிக்கும். ஆனா கையைக் கடிக்கப்படாது. அதான் நோக்கம்.

அங்: சரி; நாளை நடக்க வேண்டிய காரியம் சம்பந்தமாக, உங்கள் கருத்து என்ன?

ஏகா: போட்டோ எடுக்கற விஷயம்தானே?

அங்: ஆமா. உங்கள் எல்லாருடைய அபிப்பிராயமும் தேவை.

இத: நம்ம சங்க மெம்பர்களுடைய போட்டோ ஒண்ணு, இந்த அறையிலே இருக்க வேண்டியதுதான். முன்பே இருந்திருக்க வேண்டியது. சிரத்தைக் குறைவு. தூங்கி விட்டோம்.

ஆடி: (கிண்டலாக) நண்பா தூங்காதே! விழித்துக்கொள்!

அங்: ஆகவே, மெம்பர்கள் போட்டோ அவசியம்தான். போட்டோவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படித்தானே முடிவு?

ஆடி: செயலாளர் கவனிக்கட்டும். இது முடிவு அல்ல! விளக்கம் தேவை. இப்போ இந்தப் போட்டோவுக்கு வந்த அவசியம் என்ன?

அங்: நம்முடைய சங்கத்தின் நடவடிக்கை எல்லாம், பத்திரிகைகளிலே பிரசுரமாக ஏற்பாடு செய்யவேண்டும். அத்துடன் போட்டோவையும் அனுப்பி, அதை வெளியிடுமாறு வேண்டிக்கொள்ளலாம்.

ஆடி: சிந்தனை செய்யுங்கள். எதுக்காக இந்த ஏற்பாடு?

அங்: இது சிந்தித்து முடிவு செய்த விஷயம்தானே? ஆதியில் சொன்னபடி நமது சங்கம் பிரபலம் அடையவே இந்த ஏற்பாடு.

உல: ஆமா! விளம்பரமே நம்மை வெளிப்படுத்தும். வெளி உலகுக்கு இழுத்து வரும்; பிரபலப்படுத்தும். விளம்பரமே-நீ வாழ்க!

ஆடி: சிந்தனை செய்யுங்கள். பூக்கடைக்கு விளம்பரம் அவசியமா?

இத: மிஸ்டர் ஆடி. நாம் பூக்கடையா வச்சிருக்கோம்? கோணல் கட்சி பேசாதே.

ஈசு: அது வாஸ்தவம்தானே, மிஸ்டர் ஆடி?

ஆடி: இருக்கட்டும். ஆனால் அன்பர்களே, சிந்தனை செய்யுங்கள். போட்டோ எடுக்கப் பணச் செலவு உண்டு.

ஏகா: அது தெரிஞ்ச விஷயம்தானே?

இத: ஓசியிலே உனக்கு ஆள் வந்தா, ஏற்பாடு செய்யுங்களேன். சந்தோஷம்!

ஆடி: உலகநாதனுக்குப் போட்டோ எடுக்க வருமே. நல்ல காமிரா இருக்கு. நம்மிடையே ஒரு கலைஞன் இருக்கிறான். அவனைக் கைதூக்கி விடவேண்டாமா? கை கொடுப்பது நமது கடமை.

(உலகநாதனிடம்) நீ எடேன் உலகு?

உல: நான் ரெடி.

ஆடி: அப்போ நீயே போட்டோ எடு.

உல: ஆனு மெம்பர்கள் உருவம் அங்கே விழாது.

ஆடி: ஏன் விழாது?

உல: போட்டோ எடுக்கும் போது ஷேக் ஆகுதே, பிரதர்!

இத: ஷேக் ஆகுதா? அப்படி யானு ரொம்ப நல்லா விழுமே.

உல: எது விழும்?

ஆடி: உன் காமிரா!

ஏகா: கேலி கிடக்கு! இப்போ நடக்கறதைப் பத்திப் பேசுவோம்.

ஆடி: ஒரு காரியம் செய்யேன், உலகு.

உல: என்ன யோசனே?

ஆடி: காமிராவை ஸ்டாண்டிலே போட்டு எடேன்.

உல: ஸ்டாண்டிலே போட்டு, ஸிட்டிங் எடுக்க எனக்கு வராதே ஆடி! ஒரு காரியம் செய்யட்டுமா? என் மாமன் மகன் கல்யாணம் சென்னேயிலே படிக்கிறுன்; அவனுக்குக் காமிரா விஷயம், தண்ணி பட்ட பாடு..

ஆடி: இருந்தாலும், அவனுக்கு ஏதாவது 'சம்திங்' குடுக்கத்தான் வேணும்; அதான் கண்ணியம்!

அங்: அப்போ ஆகிற செலவை, ஆளுக்கு இவ்வளவுன்னு பிரித்து ஒவ்வொரு மெம்பரும் கொடுக்க வேண்டியதுதான்! இதிலே யாருக்காவது ஆட்சேபம் உண்டா?

ஆடி: இருக்கு! இப்படியே பல காரியம் நடந்தா, கணக்குப் பாருங்களேன்! சிறு துளி பெரு வெள்ளம் தானே?

ஏகா: இப்படியே விதண்டா வாதம் பண்ணிஞ, ஒரு காரியமும் நடக்காது.

அங்: நாளே சங்கத்துப் போட்டோ எடுக்கிறேம்; ஆகும் செலவைப் பகிர்ந்து கொள்வோம்; இதுவே முடிவான ஏற்பாடு!

ஆடி: இருங்க! இன்னெரு விஷயம். போட்டோவுக்கு வராதவங்களே என்ன செய்வீங்க?

அங்: வர இஷ்டமில்லாதவர், தயவுசெய்து கையைத் தூக்கலாம்.

ஆடி: மிஸ்டர் அங்கப்பன். இதோ பாருங்க! கையைத் தூக்கறது, கண்ணேச் சிமிட்டறது, தலேயை ஆட்டறது, இந்த விவகாரமே எனக்குப் பிடிக்காது.. வாயைத் திறந்து பேசட்டுமே எல்லாரும்?

அங்: இஷ்டமில்லாதவர் வாய் திறந்து பேசலாம்! யாருமே பேசலேயே! என்ன மிஸ்டர் ஆடி?

ஆடி: யார் பேசினுலும், யார் பேசாத போனுலும் அக்கறை இல்லே எனக்கு..நான் ஒருவன் பேசினது மட்டும் நினேவிருக்கட்டும்!

இத: சரி காரியத்தைக் கவனியுங்க மிஸ்டர் அங்கப்பன். நாளேப் புரோக்கிராமை அறிவிக்கிறது நல்லது.

அங்: தயவு செய்து சங்க மெம்பர்கள் எல்லாரும், நாளேப் போட்டோவுக்கு வந்து சேரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். கூட்டம் இப்போது இனிது முடிவடைகிறது.

காட்சி 2

[தோட்டம்: உலகநாதன் போட்டோ எடுக்கிறுன்]

உல: ஸ்டெடி, பிளீஸ்! நானே போட்டோ எடுக்கப் போறேன்; மிஸ்டர் ஈஸ்வரன், சிரிப்பானேன்? ஸ்டெடி ப்ளீஸ், எவ்வரிபடி!

(கை கால் ஆடுகிறது-சிரிப்பு.)

என்ன ஈஸ்வர் சிரிக்கிறே? எதுக்கு எல்லாரும் இடி இடின்னு சிரிக்கிறீங்க? நான் அப்படிச் சிரிக்கச் சொல்லலேயே! ஸ்டெடி பிளீஸ்!

ஈசு: என்ன மிஸ்டர் உலகு, எங்களே ஸ்டெடின்னு சொல்லிவிட்டு, உன் கை கால் தந்தி அடிக்குதே!

இத: இப்படி ஒரே ஷேக்கா ஷேக்கிஞ, எப்படி போட்டோ எடுக்கறது?

உல: கைகால் தந்தி அடிக்குது, இல்லேயா? நல்லா பாருங்க! நான் பொய் சொல்லலே; இதை நான் முந்தியே சொல்லிட்டேன்; இருந்தாலும் நம்ப வாண்டாமா? அதை நிரூபிக்கவே, இந்த முயற்சி!

இத: சரி போதும், உன் வீண் முயற்சி!

உல: சரி; இப்போ, என் பிரண்டு மிஸ்டர் கல்யாணம் போட்டோ எடுப்பார்.

ஈசு: சரி. நீயும் வந்து குரூப்பிலே உட்காரு, உலகு!

[உலகு கூட்டத்தில் வந்து உட்கார, கல்யாணம் போட்டோ எடுக்கிறான்.]

கல்: ஸ்டெடி..பிளிஸ்! மிஸ்டர் காக்கிச் சட்டை, கொஞ்சம் பின்னாலே போங்க; மஞ்சள் சட்டை, முன்னுக்கு வாங்க; மிஸ்டர் மூக்குக்கண்ணாடி, நீங்க சைடுலே இடதுபுறம், கொஞ்சம் முகத்தைத் திருப்புங்க! சார்! அங்கவஸ்திரம் உங்க வாயை மறைக்குது; சரியாப் போட்டுக்கிட்டு, வலது புறம் கோடியிலே வந்து நில்லுங்க! ரைட்டோ! ஸ்டெடி ப்ளீஸ், ரெடி!

அங்: கொஞ்சம் இருங்க, போட்டோகிராபர் சார்! இன்னும் ஒரு மெம்பர் வரலையே. மொத்தமே எட்டுப் பேர். அதிலே ஒருவர் வரலையின்னா நல்லா இருக்காதே.

ஈசு: ஆடிய பாதம்தான் வரலே. காரியம் நடக்கட்டும். அவர் வரமாட்டார்.

அங்: என்ன ஈஸ்வரன், அவருக்கு ஞாபகப் படுத்தினியா?

ஈசு: பின்னே சும்மாவா சொல்றேன்? நான் சொன்னதை அவர் காதிலே போட்டுக் கொள்ளவே இல்லே.

அங்: நான் போட்டோவுக்கு இருக்கமுடியாதுன்னு வந்து கண்டிப்பாகச் சொல்லிட்டாவது போயிருக்கலாம்; கொஞ்சமாவது பொறுப்பு இல்லையே!

கல்: சார், நேரமாகுதே! லைட்டு பெயிலாகுமே. நல்ல ஆங்கிள் செட் பண்ணியிருக்கேன்; உங்க பின்னாலே வரிசையாச் செடிகள் இருக்கு; செடியிலே பறவைகள் உட்கார்ந்திருக்கு; அதுகள் பறக்கறதுக்கு முந்தி போட்டோ எடுக்கணும்! இந்தப் போட்டோவை நம்பித்தான் இருக்கேன். இதிலேயிருந்து என் பேரு பிரமாதமா எடுபடும்.

இத: மிஸ்டர் ஆடி உட்காரவேண்டிய நாற்காலி காலியா கிடக்கவா?

உல: அதை 'கட்' பண்ணிட்டாப் போகுது.

அங்: நாற்காலி சென்டரிலே இருக்கு, எப்படிக் கட் பண்ணுவே, உலகு?

உல: ஓகோ..மா..அதுவும் நிசம்தான்.

ஈசு: நேரமாகுது அங்கப்பன்!

நான் சென்ட் போட்டு வந்ததெல்லாம் வீணு காத்திலே போகுதே!

ஏகா: வெயிலிலே உட்கார வச்சிட்டிங்களே. சாந்துப்பொட்டெல்லாம் இளகி, மூக்கிலே வழியப் போகுது!

கல்: இருங்க சார், அப்படியே எடுத்திடலாம்.

அங்: இன்னும், கொஞ்சநேரம் பொறுத்துப் பார்க்கலாமா? ஒரு வேளை ஆடியபாதம்...

ஈசு: வரவே மாட்டான். ஒரு காரியம் செய்வோமே. ஆடி உட்காரவேண்டிய நாற்காலி நடுவே காலியாகவே இருக்கட்டும். இருபுறமும் நாம் உட்கார்ந்து போட்டோ எடுக்கலாமே.

அங்: அப்போ அந்த நாற்காலியை அப்படியே நடுவே காலியா விட்டுவைக்கிறதா?

ஈசு: நாற்காலி சும்மா கிடக்க வேண்டாம். ஒரு ஐடியா..ஒரு அட்டையிலே ஆடியபாதம்னு எழுதி, நாற்காலியிலே வச்சு,

அவர் சொல்லும் யுக்தி!

ப. கி. மூர்த்தி

எழுத்தாளர் சோகமாக உட்கார்ந்துகொண் டிருந்தார். அப்பொழுது எதிரே வந்து அமர்ந்த அவருடைய நண்பர் கேட்டார்:

"ஏன் சார், விசனமாயிருக்கிறீர்கள்?"

எழுத்தாளர் தலையில் அடித்துக்கொண்டு, "என்ன மட ஜன்மங்கள் சார்! ஒவ்வொருவரும் நான் எழுதப்போகும் சமயம் பார்த்து வந்து பேசி நம் கழுத்தை அறுக்கிறார்கள். வந்தால் சுலபத்தில் போவதில்லை. அந்த நேரத்தில் எவ்வளவோ நல்ல கதைகள் எழுதலாம்; இது எங்கே சார், தெரிகிறது - வருகிற மடையர்களுக்கு?" என்று வருத்தத்தோடு கூறினார்.

நண்பருக்குச் சுருக்கென்றது! தம்மைத்தான் இப்படி மறைமுகமாகத் திட்டுகிறார் என்பதை நினைத்ததும் ஆத்திரம் வந்தது அவருக்கு. ஆயினும், அதை அடக்கிக்கொண்டு அமைதியாக, "ஒரு யுக்தி செய்யுங்களேன், சார்! நீங்கள் ஏற்கனவே எழுதி வைத்திருக்கிறீர்களே கதை! அதைப் படித்துக் காண்பிப்பதாகச் சொல்லுங்கள், வருகிறவர்களிடம். அப்புறம் இங்கே ஒரு கழுதை எட்டிப் பார்க்கிறதா பாருங்கள்!" என்றார்.

எழுத்தாளரின் முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை.

போட்டோ எடுத்திடலாம். எப்படி ஐடியா!

இத: ஒண்டர்புல்! அப்படியே செய்திடலாம்.

உல: ஆமா அது ஐடியா போட்டோவாயிடும். எடு, கல்யாணம்.

ஏகா: சரி; பேரை எழுதி அட்டையை வையுங்களேன்.

ஈசு: இதோ ரெடியா இருக்கு, அட்டை! இதோ வச்சேன், நாற்காலியிலே!

கல்: அடடே, ஒரு பறவை பறந்திட்டுதே.

ஈசு: நீங்க அதைப் பிடிக்கப் போயிடாதீங்க! போட்டோவை எடுங்க.

அங்: ஆமா போட்டோகிராபர், சார்!..

கல்: ஆல் ரைட்டு! ஸ்டெடி பிளீஸ்! ரெடி! தாங்க் யூ!

காட்சி 3

[சங்க அறை]

ஆடி: இந்தக் குரூப் போட்டோ எடுத்த செலவுக்காக எங்கிட்டே பணம் கேட்கிறீங்களே; இது எந்த வகையிலே நியாயம்?

அங்: எல்லாரும் சேந்து பேசி எடுத்ததுதானே?

ஆடி: பேசினது இருக்கட்டும்: அந்தப் போட்டோவுலே நான் இருக்கேனா?

அங்: நீங்கதான் வரலையே!

ஆடி: பின்னே, எப்படிப் பணம் கொடுக்கிறது? நாலு பேருகிட்டே சொல்லிப் பாருங்க.

இத: மிஸ்டர் ஆடி, உங்களைப் போட்டோவுக்கு வரவாண்டாமின்னு சொன்னோமா?

ஏகா: ஈச்வரன்கூட வந்து உங்களைக் கூப்பிட்டானே?

அங்: அந்தப் பேச்சு கிடக்கு. நான் போட்டோவுக்கு வரலே. ஆகவே நான் பணம் தரவும் முடியாது! புரியுதா? பேசிப் புண்ணியமில்லே. கொட்டிக் கொட்டி அளந்தாலும் குருணி பதக்கு ஆகாது.

உல: அவர்தான் வார்த்தையைக் கொட்டிக் கொட்டி அளந்தாச்சே! அவரை விடுங்க; ஆன செலவை

நமக்குள்ளேயே பகிர்ந்து கொள்ள லாம். சும்மா இருங்க!

காட்சி 4

[ஆடியபாதம் வீடு]

ஈசு: ஆடி! அந்த போட்டோ பத்திரிகைக்குப் போயிருக்கு தெரியுமா உனக்கு?

ஆடி: யாருமே பிரசுரிக்கமாட்டாங்க. ஒரு ஸீட்டு காலியா விட்டு வெச்சு எடுத்திருக்கு போட்டோ. எந்தப் பத்திரிகையிலேயும் இது வெளிவராது! ஒரு மெம்பரை வேணுமின்னே நீக்கி, அவரை அவமானப்படுத்திவிட்டு, போட்டோ எடுத்ததாக நினைக்க இடமுண்டு. ஒற்றுமை இல்லேன்னு போட்டோவே எடுத்துச் சொல்லுமே!

ஈசு: அது எப்படியும் போகட்டும்! போட்டோ காம்படிஷனுக்கு அந்தப் போட்டோ போயிருக்கு! பிரைஸ் கட்டாயம் வருமின்னு போட்டோகிராபர் அபிப்பிராயம்.

ஆடி: அந்தக் குறும்பு போட்டோவுக்கு ஒரு நாளும் பிரைஸ் வராது. நான் வேணுமானு எழுதித் தறேன், உனக்கு. ஐயாவை ஒரு போட்டோ எடுத்திருக்கு. நல்ல போஸ் குடுத்திருக்கேன். அதுக்குத்தான், முதல் பிரைஸ்! உங்களுக்குப் பெரிய ஏமாற்றம் காத்திருக்கு.

ஈசு: நீ போட்டோ அனுப்பியிருக்கியா?

ஆடி: ஆமா. அதான் பஸ்ட் பிரைஸ் அடிக்கப் போகுது. அன்னிக்கு நம்ம கணக்கிலே காபி உனக்கு!

ஈசு: ஆகா..பெரிய அதிசயமாயிருக்கே, உன் வார்த்தை! என் காதை நம்பலாமா? நீ சொன்னது உண்மைதானு? அந்த நாளும் வருமா? எனக்கு என்னமோ..!

ஆடி: ஷட்-அப், யூ இடியட்! அபசகுனமாப் பேசாதே! அடுத்த வாரம் ரிஸல்ட் வரும்! பாரு..

காட்சி 5

[சங்க அறை]

அங்: என்ன உலகு, இப்படி ரிஸல்டு வருமின்னு யாராவது நினைச்சிருப்பாங்களா?

உல: எனக்கு நம்பிக்கை இருந்தது. நம்ம சங்க போட்டோவுக்குத்தான் பரிசு கிடைக்குமின்னு எனக்கு நம்பிக்கை உண்டு; அப்படியே தான் கிடைச்சிருக்கு! எனக்கு அதிசயமாகப் படலையே.

இத: இது ஒரு தமாஷ் போட்டோ பாருங்க. அதான் முதல் பரிசு கிடைச்சிருக்கு. மிஸ்டர் ஆடி, வராமப்போனதிலே இந்த நூதனக் கருத்து. காலி நாற்காலிக் கற்பனே உதயமாச்சு! உடனே அட்டையில் பேர் எழுதிப் போட்டு, போட்டோ எடுத்தோம். இல்லையா ஏகாம்பரம்?

ஈசு: ஆமா; ஆடியபாதம் வந்திருந்தா, போட்டோவே நல்லா வந்திருக்காது!

இத: அவனும் ஒரு போட்டோ அனுப்பியிருக்கான்! பாவம்! ஒரு ஆறுதல் பரிசுகூடக் கிடைக்கவில்லை.

உல: அதான் சொல்ல வந்தேன்; அந்த அதிர்ஷ்டக் கட்டை, நம்ம குரூப்பிலே இருந்தால், பிரைஸ் கிடைச்சிருக்குமா?

[ஆடியபாதம் வருகிறுன்.]

ஆடி: அதிர்ஷ்டக் கட்டையோ, அதிர்ஷ்டமான கட்டையோ, அதைப் பத்திப் பேசுவானேன்? பிரைஸ் கிடைச்சிருக்கே அதை மறுக்க முடியுமா?

இத: வாங்க மிஸ்டர் ஆடி! உங்களுக்குக் கூட சந்தோஷமா, உண்மையாவே? இல்லே, வெளி வேஷமா?

ஆடி: வெளி வேஷம், உள் வேஷம் என்கிற தண்டாவெல்லாம் நம்மகிட்டே கிடையவே கிடையாது! எல்லாம் பிளெயின்; வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டு தான்! இந்தப் பிரைஸிலே எனக்கும் ஒரு பங்கு உண்டு; இதை யாருமே மறுக்க முடியாது!

அங்: அதெப்படி உங்களுக்குப் பங்கு?

ஆடி: நான் வராத காரணம் தான், உங்களுக்குப் பரிசு கிடைச்சிருக்கு, புரியுதா? ஆகவே அந்த உதவி செய்த எனக்கு, பரிசிலே ஒரு பங்கு உண்டு; இதான் நம்ம பாயிண்டு.

அங்: மிஸ்டர் ஆடி, இதுக்கும் உங்களுக்கும் சம்மந்தமில்லேன்னு,

''டேய், அந்தக் கடையிலே போய்த் தீபாவளி இனாம் கேட்டியா?''

''போப்பா, அங்கே போய்ப் பல்லைக் காட்டினா என்ன கொடுத்திடுவான்? மிஞ்சினா ஒரு பொட்டலம் பல்பொடியைத்தான் தருவான்!

ஆரம்பத்திலேயே கையைக் கழுவிட்டீங்களே?

உல: போட்டோ எடுத்த பிற்பாடுதான் ஆகட்டும், செலவைப் பங்கு போடவே சம்மதிக்கவில்லையே!

ஏகா: ஆரம்ப நாள் முதலா பங்கு எடுக்கமெ, இப்போ பரிசு கிடைக்கவும், சொந்தம் கொண்டாட வறீங்களா? வாங்க ஐயா நியாயக்காரரே!

ஆடி: நான் இப்பவே ரிஸைன் பண்ணிடறேன். உங்க குறும்புக்கும் நமக்கும் கட்டி வராது! நான் தனியா ஒரு சங்கம் ஆரம்பிக்கிறேன்.

அங்: புதுச் சங்கம் ஆரம்பிக்கிறது, பாதாம்கீர் சாப்பிடற மாதிரி இருக்காது பிரதர்! ரொம்பக் கஷ்டம் உண்டு. அதைச் சமாளிக்கச் சக்தி உண்டா?

ஆடி: என் சக்தியிலே எனக்கு நம்பிக்கை உண்டு.

இத: இப்படி உன்னைப்போல ஒவ்வொருவரும் பிரிஞ்சுபோய் தனியா ஒரு சங்கம் ஏற்படுத்தி, ஊரிலே சங்கங்கள்தான் அதிகம் இருக்குமே தவிர, செயல்பட முடியாது. நம்மிடையே ஒற்றுமை குலைந்து போகும்!

ஆடி: போகட்டும் அதைப்பற்றி யாருக்குக் கவலை?

அங்: உங்களுக்குக் கவலை இல்லாத போனாலும், எங்களுக்கு உண்டு மிஸ்டர் ஆடி! உங்களையும் சேர்த்துத்தான் விருந்து....

இத: போகட்டுமே ஆடிய பாதம்! போக விடுங்க, மிஸ்டர் அங்கப்பன்!

ஈசு: மிஸ்டர் ஆடி, இந்தப் புகைப்படம், எங்க முகத்தை மட்டுமில்லை. உங்க குணத்தையும் படம் பிடிச்சுக் காட்டி இருக்கு; இதுபோல் புகைப்படம் வாழ்க!

ஏகா: வாழ்க, வாழ்க. எல்லாரும் சொல்லுங்களேன்.

[வாழ்க வாழ்க என்று எல்லாரும் கூறுகிறார்கள்]

உல: கன்றுக்குட்டி துள்ளி ஓடும். அதுபோல நம்ம ஆடிய பாதம் போறான் அதோ!

அங்: போனால் போகிறது. அவனையும் கூப்பிடு, ஈஸ்வரன். நமக்கு யார் கிட்டேயும் கோபமோ பொறுமையோ கிடையாது. இந்தச் சங்கத்துக்கு வந்த பரிசுலே எல்லா மெம்பர்களுக்கும் பங்கு உண்டு. இந்தப் போட்டோவுக்கு ஆடிய பாதம் வந்து தொலைச்சிருந்தா இந்தப் பரிசு நமக்குக் கிடைக்கவா செய்யும்? கிடக்கு! ஆடியைக் கூப்பிடுங்களேன். அவரும் பரிசிலே பங்கு பெறட்டும்.

ஈசு: ஆடியபாதம்! ஆடி! ஆடி!

[மெம்பர்கள் எல்லாரும் ஆடி ஆடி என்று அழைக்கிறார்கள். ஆனால் ஆடி விறைப்பாக வெளியேறுகிறான். ஒரே சிரிபு.]

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

செய்திகள்

சிறுவர் சித்திரப் போட்டி

மயிலை கஸ்தூரிபாய் சங்கத்தின் சார்பில் சிறுவர் சித்திரப் போட்டி ஒன்று நடக்கவிருக்கிறது. பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் அனைவரும் கலந்து கொள்ளலாம். நவம்பர் 15 - ஆம் தேதிக்குள் செயலாளர், கஸ்தூரிபா சங்கம், செல்வ நிலையம், நெ. 3 நாட்டு சுப்பராய முதலித் தெரு, மயிலாப்பூர், சென்னை - 4 என்ற விலாசத்துக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் சித்திரங்கள் கண்காட்சி ஒன்றில் இடம் பெறும். கட்டணம் கிடையாது.

வளரும் எழுத்தாளர் சங்கம்

வளரும் எழுத்தாளர்களின் முன்னேற்றத்திற்காகச் சென்னையில் வளரும் எழுத்தாளர் சங்கம் ஒன்று நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. சங்கத்தில் சேர விரும்புபவர்கள், வெ. அனந்தன், 'கீதாலயா' 5, நாகேசுவர ஐயர் தெரு, நுங்கம்பாக்கம். கதீட்ரஸ் போஸ்ட், சென்னை-6 என்ற விலாசத்துக்கு எழுத வேண்டுகிறோம்.

தஞ்சையில் கிளைச் சங்கம்

தஞ்சையில் உள்ள வளரும் எழுத்தாளர் சங்க அங்கத்தினர் 2 - 10 - 57 - இல் ஒன்று கூடி நவம்பர் மாத இறுதியில் கிளைச் சங்கத்தின் ஆரம்ப விழாவை நடத்தத் தீர்மானித்துள்ளனர். அதுவரை ஆர். சிவராமகிருஷ்ணன் செயலாளராகப் பணியாற்றி வருவார். தஞ்சை மாவட்ட இளம் எழுத்தாளர் அனைவரும் ஆர். சிவராமகிருஷ்ணன், 1138, சௌராஷ்டிர மேல ராஜ வீதி, மானம்புச்சாவடி, தஞ்சாவூர் என்ற விலாசத்துக்கு எழுதித் தொடர்பு கொள்ளலாம்.

குழந்தைப் புத்தக வெயீட்டு விழா

குழந்தைகள் தினமும், குழந்தைகளிடம் பேரன்பு பூண்ட நேருஜியின் பிறந்த நாளுமாகிய நவம்பர் 14 - ஆம் தேதி சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கத்தார் குழந்தைப் புத்தக வெளியீட்டு விழா ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

திருவல்லிக்கேணி இளைஞர் காங்கிரஸின் பாலர் பகுதிப் பிரிவின்



(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

புதிய நாணய விகிதப்படி

கண்ணன் வெளியீடுகள்

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் உள்ளன. இதோ அந்தப் பட்டியல்:—

		ரூ. நயா பைசா
1.	லீடர் மணி - ஆர்வி	1.50
2.	சந்திரகிரிக் கோட்டை - ஜனா	1.25
3.	அசட்டுப் பிச்சு - ஆர்வி	1.00
4.	சின்ன ராஜா - வாசகன்	0.75
5.	பவழவல்லி - கி. ரா.	0.75
6.	விளையும் பயிர் - கி. வா. ஜ.	0.50
7.	சமர்த்து மைனா - தி. ஜ. ர.	0.50
8.	அபாயச் சங்கு - நீலம்	0.50
9.	ஜக்கு - ஆர்வி	0.50
10.	ஜம்பு - ஆர்வி	0.50
11.	ஏரிக்கரை மாளிகை - ஜனா	0.50
12.	மின்னல் அரக்கன் - ஜனா	0.50
13.	ராஜாவும் குருவியும் - 'சோமசன்மா'	0.50
14.	கழுகும் கிளியும் - 'சோமசன்மா'	0.50
15.	தவளையும் காளையும் - 'சோமசன்மா'	0.50
16.	விஞ்ஞானம் பேசுகிறார் - பெ. நா. அ	0.50
17.	பாரஸீக ரோஜா - ஆர்வி: ஸாமி	0.32
18.	தூங்கும் அழகி - ஆர்வி: ஸாமி	0.25
19.	குளிகைத் தீவு - ஆர்வி: சங்கர்	0.25
20.	மாஸ்டர் பாலகுமார் - ஆர்வி: ஸாமி	0.25
21.	நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர்	0.20
22.	பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் - எஸ். ஜே.	0.20
23.	கோழி விதைத்த நெல் - சூடாமணி	0.20
24.	தங்கத்தின் பந்து - சூடாமணி	0.20
25.	என் பேர் என்ன? - சூடாமணி	0.20
26.	கவிஞர் கதை - கி. வா. ஜ.	0.62
27.	தங்க மாம்பழம் - ராஜி	2.00
28.	மஞ்சள் பங்களா - ஜி. ஜயராமன்	1.00
29.	புலிக் குட்டி - ஆர்வி: ஸாமி (அச்சில்)	

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.